046

"CHANDRODAYAM"   15-8-1936

1046

சந்திரோதயம்

விலை: உள்நாடு 2 அணா, இலங்கை 2½ அணா, வெளி நாடு 4 அணா.

தி ஸ்டார் ஆப் இந்தியா

இண்டஸ்டிரியல் & ஜெனரல் அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்:—நெ 8, செம்புதாஸ் தெரு, மதருஸ்.

நம் இராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டு மிகவும் திறமையுடன் நடத்தப்பட்டு வருகின்றது.

இக்கம்பெனியின் இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் மிக விசேஷமான நன்மைகளுடன் கூடியவை. எல்லா விதமான சௌகரியங்களும் அளிக்கப்படுகின்றனன்.

கம்பெனியின் அபிவிருத்தி.

அளிக்கப்பட்ட பாலிஸிகளின் தொகை	23,00,000
ஐவேஜிகள் சுமார்	2,00,000
கவர்ன்மெண்டு செக்யூரிடிகள்	1,00,000
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை (இண்டஸ்டிரியல் இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்)	3,00,000

இந்த இராஜதானியில் ஒவ்வொரு முக்கிய இடத்திலும் ஏஜண்டுகள் சம்பளத்திலும், கமிஷனிலும் தேவை. செல்வாக்கும், சாமர்த்தியமும் உள்ளவர்கள், மற்ற விவரங்களுக்கு தலைமை ஆபீஸுக்காவது, அல்லது கீழ் கண்ட ஆர்கனைஸர்களுடைய ஆபீஸுகளுக்காவது எழுதவும்.

எஸ். பாலசுப்பிரமணிய ஐயர்,
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர்,
வைதீஸ்வரன் கோவில், தஞ்சை ஜில்லா.

வி. சங்கரசுப்பு,
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

எல். நரசிம்ஹர்,
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர், 80, மேல ஆவணி மூல வீதி, மதுரை.

‘சந்திரோதயம்’

(மாத மிருமுறைப் பத்திரிகை)

“ கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்ப் பிரிந்
துலர்ந்தவர்க் குயிர்சுடு விடமுமா யுடன்
புலந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே.”—கம்பர்

ஆசிரியர் :—என். விஜயகுமார்.

தொகுதி 1	1936 ஹு ஆகஸ்டுமீ 15உ	பகுதி 3

இரண்டு கடிதங்கள்

சென்ற வாரத்தின் இறுதியில் நமக்கு வந்த கடிதங்களில் இரண்டு கடிதங்கள் கவனிக்கத் தக்கவைகளா யிருந்தன. அந்தக் கடிதங்களில் எழுதப்பட்டிருந்த முக்கியமான பகுதிகளைமட்டும் கீழேதருகிறோம்:—

முதல் கடிதம் கூறுகிறது:—

“......தங்கள் பத்திரிகை தமிழ்நாட்டிலேயே புதினுசாயிருக்கிறது. கலைக்காக இன்று பாடுபடும் பத்திரிகைகள் ஒன்றிரண்டிற்கு மேல் இல்லையே என்று ஏங்கிய சமயத்தில் தங்கள் பத்திரிகை தோன்றியது எவ்வளவோ ஆறுதலாக இருக்கின்றது. ஒவ்வொரு பக்கத்திலும் உள்ளத்திற்கு ரஸமான விஷயங்கள் காணப்படுகின்றன. ஆனால் ஒரே குறை தான் என் கண்களுக்குப் பட்டது. அதுதான் சினிமா விமர்சனம் இல்லாதது. சினிமா சம்பந்தமான கட்டுரைகளை மேன்மையான முறையில் பிரசுரிக்கிறீர்கள். சினிமா விளம்பரங்களும் தங்கள் பத்திரிகையில் காணப்படுகின்றன. இருந்தும் அதில் ஏன் விமர்சனம் இல்லை. இதுதான் எனக்கு பெரிய சந்தேகப் பிரச்சினையாக இருக்கிறது. ....ஆக, இனியாவது தாங்கள் இதில் சிரத்தைசெலுத்துவீர்களென்று நம்புகிறேன்........”

இரண்டாவது கடிதம் சொல்லுகிறது:—

“......இன்று அடிபடும் இந்த விஷயம் தங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். இதைப்பற்றி தங்கள் அபிப்பிராயமென்ன? குலஸ்திரீ, குடும்பஸ்திரீ யென்று சொல்லுகிறார்களே? இவர்கள் யாவர்? பம்பாயில் பிரபல அட்டர்னியின் மகள் துர்காபாய் கோட்டே போன்றவரா? நளினி துர்க்காட், ஸ்வரூப ராணி, எனுக்ஷி ராமராவ், கமலாதேவி சட்டோபாத்யாயா முதலியவர்கள் போன்றவர்களா? அல்லது அக்ராஹாரத்தில் வசிக்கும் குஞ்சு தீக்ஷிதரின் மகள் கமலாம்பாள் போன்றவரா? அல்லது ஸ்கூல் உபாத்தியாயினியான மிஸ் காமினி (வயது 30) போன்றவரா? இந்த விஷயம் எனக்கு அடியோடு புரியமாட்டேனென்கிறது. இதைத் தங்கள் பத்திரிகை வாயிலாக விளக்கினால் மிகவும் நன்றியறித லுள்ளவனா யிருப்பேன்.”

இந்தக் கடிதங்கள் வாததற்குமுன்பே இந்த விஷயங்களைப் பற்றி நாம் ஒருவாறு முடிவு கட்டி வைத்திருந்தோம். ஆனால் இந்த மாதிரி சந்தேகாஸ்பதமான விஷயங்கள் இன்னும் பல வாசக நண்பர்களிடமும் இருக்குமாதலின் நாம் செய்த முடிவை அறிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

விமர்சகன் கடமை என்ன வென்பதைப்பற்றி, (முற்றிலும் எதிர்பாராத வகையில் நமக்குக் கிடைத்த ஒரு கட்டுரையினால்) முதல் இதழிலேயே எழுதியிருக்கிறோம். அதிலிருந்தே நமது பத்திரிகை எத்தகைய எழுத்தாளர்களின் கட்டுரைகளை வெளியிடும்; எத்தகைய நோக்கத்துடன் நமது பத்திரிகை வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இரண்டாவதாக தாறுமாறான விமர்சனங்களை எழுதி ஜனங்கள் மனதைக் கிடுகிடாய்க்கச் செய்து செல்வாக்குப் பெறுவதும் நமது அகராதியிலேயே

இடையாது. பயமுறுத்தும் விமர்சனங்கள் மூலம் பட முதலாளிகளை மிரட்டி 'விளம்பரங்கள் தட்டும்' நோக்கமும் இல்லை. ஆக, எந்த நண்பரும் விமர்சனம் எழுதப்படாதற்காக இந்தமாதிரி சந்தேகங்களைமட்டும் வரவழைத்துக் கொள்ளக்கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அடுத்தபடி விமர்சனம் எழுதுவதினால் தமிழ்நாட்டில் உண்மையில் பயன் ஏற்படுகிறதா? என்பதும் ஆலோசிக்கவேண்டிய விஷயம். தமிழ்ச் சினிமாப் படங்களைப்பற்றி, வியாபாரத்தையே பெரு நோக்கமாகக் கொண்டுள்ள பல பத்திரிகைகள் வண்டி வண்டியாக விமர்சனங்களை மோசமான போக்கில் துணிகரமாக வெளியிட்டு வருகின்றன. இந்த விமர்சனங்கள் அடியோடு அபத்தமானவைகளென்றோ, அல்லது உண்மைகளைத் திரித்துக் கூறுவனவென்றோ நாம் சொல்லவில்லை. ஆனால் எந்த நோக்கத்துடன் இந்த உண்மைகள் எழுதப்படுகின்றன? வேறு எவ்வெக் காரணங்களைக் கொண்டு அவர்கள் பேனாக்கள் இப்படி போலி ஆவேசக் குதிப்பில் அழிகின்றன? ஸ்ரீ. அ—வைத் தூக்கி வைத்தும், ஸ்ரீமதி—காவைத் தாழ்த்தியும், ஸ்ரீ. போ—வன்னாவை ஆகாயத்திலிருந்து குதித்தவரென்றும், ஸ்ரீமதி. ரா—வை நரகலோகத்திலிருந்து எழுந்தவரென்றும் இவைகள் கூற வேண்டிய காரணமென்ன? மற்றொரு அம்சம்...... க......கம்பெனியாரின் படங்கள் கருத்தைக் கவர்கின்றன...வ. வின் பாட்டுகள் நம்மை பரவசப்படுத்துகின்றன....ஸ்ரீமதி....இப்படி நடிப்பதால்தான் தமிழ் படங்கள் உருப்படாமல் போகின்றனவென்றும் எதற்காக இவர்கள் விமர்சனங்கள் ஓலமிடுகின்றன? இவைகளையெல்லாம் வாசகர்கள் சிந்தித்துப் பார்த்தால் விமர்சன ரகசியங்கள் வெட்ட வெளிச்சமாகிவிடும். இதே மாதிரியில் தயாராகும் விமர்சனங்களின் போக்கைஎழுத்து வாசனையற்ற ஒருபட முதலாளிகூட நாளாவட்டத்தில் அறிந்துகொண்டு விடுகிறான். அவனைச் சுற்றியிருப்பவர்கள் இந்த விமர்சனங்களின் குட்டுகளைப்பற்றி அவனிடம் எடுத்துக் கூறுகின்றனர். அதன் காரணமாக விமர்சனங்கள் விளம்பரங்களைப் பெறவதன் பொருட்டே எழுதப்படுகின்றனவென்றும், கலை வளர்ச்சிக் கல்லவென்றும் பல முதலாளிகள் நினைக்கிறார்களென்றால் அதில் வியப்பொன்றுமில்லை. 'பிலிம் இந்தியா' விசேஷ நிருபரிடம் பண்டிட் இந்திரா டடங்களைப்பற்றி கூறுகையில், ''மதருவிகளுக்கு நல்லது என்பது எதுவென்பதேதெரியாது. அவர்கள் நல்லது என்பதையே இன்னது என்று ரஸிக்கத் தெரியாதவர்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார். இந்த இதழில் அந்த கட்டுரையைப் பிரசுரித்திருந்தாலும், அதை மட்டும் நாம் அங்கு எடுத்து விட்டிருக்கிறோம். இது மிகவும் அகந்தையான குறிப்பானாலும் பெரியதோர் அளவுக்கு இதில் உண்மை அடங்கிக் கிடக்கிறது என்பதை வெட்கத்தோடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்...... இந்த தமிழ்நாட்டு முதலாளிகள் பலர் படிப்புக் குறைந்தவர்கள். பம்பாய்க்கும், பூனாவுக்கும், கல்கத்தாவுக்கும், கோலாப்பூருக்கும் சென்று, தங்கள் பணத்தை லக்ஷம் லக்ஷமாக நடிகர்கள் என்ற பெயர்களுக்கே லாயக்கல்லாதவர்களுக்காக செலவு செய்து ரஸிப்பதைப் பார்க்கும்போது அந்த பம்பாய்ப் பண்டிட் அதுவும் சொல்லுவார். அதற்கு மேலும் சொல்லுவார்.

விமர்சனம் முதலாளிகளின் கண்களைத் திறப்பதாய், கண்யம் வாய்ந்ததாய், பண்டிதர்களும், பாமரர்களும் ரஸிப்பதாய், பொதுவாக நடிப்புத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைத் திருத்துவதாய், ஜனங்களை அன்பினால் அடிமை கொள்ளுவதாய் இருக்கவேண்டும். இந்த ரீதியில் வரும் விமர்சனம்தான் விமர்சனம் என்ற பெயருக்கே லாயக்கானதாக இருக்கும். சமயம் நேரும்போதெல்லாம் இத்தகைய விமர்சனங்களை எழுத நமது பத்திரிகை தவறவே தவறாது என்று உறுதி கூறுகிறோம்.

இரண்டாவதாக குல ஸ்திரி...குடும்பஸ்திரி விவகாரம். யாரோ ஒரு மஹானால் ஆரம்பிக்கப்பட்ட இந்த விஷயம் கொஞ்ச நாட்களாக பத்திரிகையின் எடுகளை பாழ்பண்ணி வருவதைக் காணும்போது உண்மையில் நமக்கு வருத்தமாய்த்தானிருக்கிறது. குடும்பஸ்திரி என்றாலே நமக்கு வாஸ்தவத்தில் அர்த்தம் புரியமாட்டேனென்கிறது! யாருக்குக் குடும்பமில்லை என்பதே முதல் கேள்வி. குச்சுக்காரியும் குடும்பத்தில்தான் பிறக்கிறாள். குடும்பத்தில்தான் வளர்கிறாள். குடும்பத்தில் பிறந்தவர்களுடன்தான் வியாபாரம் நடத்துகின்றாள். இவர்களுடன் குடும்பமும் நடத்துகின்றாள்.

குச்சுக்காரிகளும், நாடகக்காரிகளும், நாட்டியக்காரிகளும், பாட்டுக்காரிகளும் குடும்பங்களில்தான் இருக்கின்றனர். இவர்களுக்கும் கணவன்மார்கள், குழந்தை குட்டிகள், லொட்டு, லொசுக்கு.....எல்லாம்தான் இருக்கின்றன. இவர்களெல்லாம் கொஞ்சம் பெரிய குடும்பத்தினர்கள்கூட. அல்லது உத்தியோகஸ்தர்கள், பத்திராகாசிரியர்கள், வியாபாரிகள் இவர்கள் மனைவியர்கள், பெண்கள், இவர்கள்மட்டும்தான் குடும்பமா? யாருடையது குடும்பம்? யாருடையது.

குடும்பமில்லை. குடும்ப ஸ்திரிகள் என்பது சரியான பதப்பிரயோகம் தானா?

என்ன, அர்த்தத்தின்மீது இந்த குடும்ப ஸ்திரிகள் என்ற கலாட்டா நடக்கின்றது! இதை நினைக்கும் போது நமது உள்ளமே சுழல்கின்றது. குடும்பம் என்ற பதத்தை கண்ணை மூடிக்கொண்டு உபயோகிப்பதும், அதன்மீது விவாதம் நடப்பதும் இன்று தமிழ் நாட்டின் கேலிக்கூத்தாக இருக்கின்றது.

*　　　*　　　*

இந்த விவாதத்தின் சாரத்தை நாம் அறியாமலில்லை. ஸ்திரிகள் சினிமாக்களில் நடித்தால் அவர்கள் நெறியாக வாழ்க்கை நடத்த முடியாது என்று சொல்வதை வேண்டுமானால் ஒருவேளை நாம் அனுமதிக்கலாம். இப்படிச் சொல்வதற்குக்கூட பெரிய மனோதிடம் வேண்டும். விபசாரம் கூடவே பிறப்பதில்லை. வாழ்நாட்களின் இடையில்தான் ஏற்படுகிறது. சமூகம் விபசாரியாக்கிறதே ஒழிய சர்வேஸ்வரன் ஆக்குவதில்லை. ஆணும் பெண்ணும் முறையாக இருந்துவிட்டால் விபசாரத்துக்கு இடம் கிடையாது. பிரச்சினை பெரிது. இதைப்பற்றி சமயம் வாய்க்கும் போது எழுதுவோம்.

ஆண்களின் காமத்திற்கு இலக்காகும், இலக்காகாத பஞ்சைப் பெண்களை குடும்பப் பெண்கள் அல்லாதவர்கள் என்ற எல்லையில் கொண்டுவந்து நிறுத்தி அவர்கள் அனைவரையும் கேவலமான குச்சுக்காரிகள் என்று வெளிப்படையாகக் கூறும் ஒருவரின்யோக்யதாம்சங்களைப்பற்றி உங்கள் தீர்ப்புக்கே விட்டு விடுகின்றேன்.

யாருக்கு கொலைசெய்யத் தைரியமில்லையோ, அவர்கள் இன்று இந்தமாதிரி எழுத்தாளர்களாய் விடுகின்றார்கள் என்று சொல்வதே போதுமானது.

நல்லவேளையாய் குடும்பத்துப் பையன்கள் படங்களில் நடிப்பதைப்பற்றி எந்த மாகானுபாவரும் கிளப்பாமலிருக்கின்றாரே! அதற்காக அவரிருக்கும் திக்கு நோக்கி ஒரு கும்பிடு போடுகிறோம்.

தங்கமெடல் பெற்றது!

"ஜே"

மஸ்கி

பெருங்காயம்

எல்லா இடங்களிலும் விற்கப்பட்டு வருகிறது.

கோபால்ஜீ

அண்டு கோ,

203, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

கிளை ஆபிஸ்:—கும்பகோணம் மதுரை.

தயாராகிவிட்டது!   வெளிவரும் தினத்தை எதிர்ப்பாருங்கள்!!

M K ராதா	T N மீனாக்ஷி
S V. வெங்கடராமன்	K R ஜெயலக்ஷ்மி
கிளவுன் சுந்தரம்	P R மங்களம்
12-வயது H. சங்கரன்	10-வயது பாப்பா
	K P. காமாக்ஷி

ஆகியோர் நடித்த உன்னத சமூக சீர்திருத்த தமிழ்ப் பேசும் படம்.

:: "சந்திர மோகனா" ::

அல்லது

'சமூகத் தொண்டு'

நாட்டிய சக்கிரவர்த்தினி

ராகினிதேவியின் டான்ஸ்

பார்க்கத் தக்கது.

டைரெக்ஷன்: ராஜா சந்திர சேகர்

விபரங்களுக்கு:   தந்தி:—Movitone

மோஹன் மூவிடோன் கம்பெனி,

157, தெற்கு மாசி வீதி, மதுரை.

1938

: கலியாண மோதிரம் :

[ஸ்ரீ எம். எச். வாஸ்வானி]

கலியாண மோதிரம் உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதை மிகச் சிலரே அறிவார்கள். மேல் நாட்டினது உறவினால் மோதிர வியகாரம் இந்தியாவில் ஏற்பட்டதாக பலர் கருதுகின்றனர், தங்கமிருப்பதனால் கலியாண மோதிரம் ஒரு மங்களகரமான பொருளன்று சொல்லப்படுகிறது. ஆனால் மோதிரம் கொடுப்பது, வாங்குவது, மாற்றிக்கொள்வது இவைகளெல்லாம் கலியாண காலங்களில் சாதாரணமாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. மனைவிக்கும், கணவனுக்கு மிடையிலுள்ள அன்பை சமனப்படுத்துவதன் பொருட்டே இம்மோதிர மாற்றல் என்று ஏற்பட்டுள்ளது.

கலியாண மோதிரம் வெறும் தங்கத்தினால் தான் செய்யப்படுகிறது. ஏனெனில் பொன்னுக்கு சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சக்தி உண்டு. பிரகாசமான தோற்றத்திற்கு, அதைக் காண்பவர்கள் கருத்தில் உவகையை ஊட்டும் சக்தி உண்டு. வாழ்க்கையின் உற்சாகத்தையும், குதூகலத்தையும் அதிகரிப்பதற்கே கலியாணம் ஏற்பட்டிருக்கிறது.

தவிரவும், எல்லா உலோகங்களைக் காட்டிலும் பொன் மகா மேன்மை வாய்ந்ததென்பது பொதுவாகத் தெரிந்த ஒரு உண்மை. ஆதலின் பொன் மோதிரம், கலியாணத்துக்குமுன் நம்முள்ளிருந்த தாழ்மைக் குணமும் அழுக்குகளும் அகற்றப்பட்டுவிட்டனவென்பதைக் காண்பிக்கும் அடையாளமாகவுமிருக்கிறது. கலியாணம் என்ற வார்த்தைக்கு உண்மையான அர்த்தம், கணவன், மனைவி இருவரின் உள்ளத்தை பரிசுத்தப்படுத்தி உயர்ந்த இலட்சியங்களுக்கு நடத்திச் செல்வது என்பதுதான்.

பொன் மிகவும் பரிசுத்தமான உலோகம். "பொன்னைப்போல் புனிதமான" என்ற வார்த்தைகள் பல தடவைகளில் உபயோகிக்கப்பட்டு வருவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆகவே பொன் மோதிரம், கணவனுக்கும் மனைவிக்கும் மனப்பரிசுத்தத்தை கொண்டுவருவது. மனம் புனித மடைந்தால் தான், அவன் அவளாகி, அவள் அவனாகி! கருத்தொருமித்த காதலர்களாய் இருந்து இல்லறத்தை சரியானபடி நடத்தி இகபர இன்பங்களை யடைய முடியும்.

முடிவாக நீடித்த காட்களுக்கு உழைப்பதும் பொன்னேயாகும். அதை நெருப்பில் போட்டுச் சுட்டால் அதன் பிரகாசம் இன்னும் அதிகமாகும். வேறு எந்தத் திராவங்களில் போட்டாலும் அதன் சுய உருக்குலைவதில்லை.

தீய்க்கும் கஷ்டங்கள் நேரிடினும், கட்டுக் கட்டாய் சோதனைகள் வந்தாலும், தம்பதிகள் அவைகளால் தளர்வடையாதிருக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கை இன்னும் மேன்மையாகப் பிரகாசிக்க வேண்டும். இதையெல்லாம் இடித்து இடித்துக் கூறுகிறது அந்தப் பொன் மோதிரம். ஆனால் இப்போது இது புதுக்கதையாகி விட்டது. மோதிரம் எவ்வளவு சீக்கிரமாக விரலில் திணிக்கப் படுகிறதோ, அவ்வளவு சீக்கிரமாகவே புதுத் தம்பதிகளுக்கு மனமுறிவும் ஏற்பட்டு விடுகிறது.

முதலில் மோதிரம் எதனால் செய்யப் படுகிறது என்பதைக் குறிப்பிட்டேன். இப்போது அது எந்த உருவத்தில் செய்யப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். கலியாணக் கணையாழி வட்ட வடிவமாகவே இருக்கிறது. பூரண வட்டம்; முடிவற்ற வட்டம். அதே மாதிரி கலியாணகாலத்தில் அவனையும் அவளையும் பிணிக்கும் அன்புக்கும் காதலுக்கும் முடிவே இருக்கக்கூடாது.

முடிவற்றதிலிருந்துதான் காதல் வருகிறது; அதில் தான் காதல் போய்ச் சேருகிறது.

தவிரவும் வட்டவடிவமே குறைசொல்லமுடியாதது. சதுரம், முக்கோணம் முதலியவைகள் அவலக்ஷணமானவைகளே. ஆதலின் வட்ட வடிவத்தைப்போலவே கலியாணமும் பூரண அழகுடன் விளங்குகிறது.

ஒரு நல்ல கலியாண மோதிரத்தில் அலங்காரவேலைப்பாடுகள் எதுவும் இருக்கக்கூடாது. அதுவே கலியாண வாழ்க்கை எளிமையாயும், அதே சமயம் ரம்மியமாகவும் இருக்கும் என்பதைக்காண்பிக்கும். ஆடம்பரங்களும், வசதிகளும் எப்போதும் காதலுக்கு ஈடுசெய்ய முடியாது. "குடிசையில் உண்டாகும் காதலைப் போல் அரண்மனையில் காதல் உண்டாவதில்லை'

கலியாண மோதிரம் இடது கையில் 4-வது விரலில் போடப்படுகிறது. இந்த 4-வது விரல் இரண்டு இருதயங்களும் கலக்கும் உயிரின் ஸ்தானத்தோடு நெருங்கி சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற நம்பிக்கை எங்கும் இருந்து வருகிறது. வலது கை இடது கையைவிட இருதயத்திற்கு சமீபத்தில் இருப்பதினாலேயே மோதிரம் இடது கை விரலில் போடப்படுகிறது. இருதயத்திலிருந்தே காதல் ஊற்றெடுத்துப் பாய்கிறது.

மீண்டும் கணவனுக்கு மனைவியிடத்திலுள்ள அதிகாரத்தையும் மணமோதிரம் குறிப்பிடுகிறது.

அதே மாதிரி மனைவிக்கு கணவன் தனது மோதிரத்தைப் போடுவது கணவன் தனது பூரா நம்பிக்கையையும் அவளிடம் வைக்கிறான் என்பதைக் காட்டும்'

வாழ்க்கையில் நிர்வாணம்

"நளினி மோஹன்"

பழைய விஷயத்தைத் திருப்பிச் சொல்வது எனக்குப் பழக்க மல்ல. சென்ற இதழில் "கலையில் நிர்வாணம்" என்பதைப் பற்றி எழுதினேன். இந்த வாரம் 'வாழ்க்கையில் நிர்வாணம்' என்று எழுதுகிறேன். அந்தக் கட்டுரை நிர்வாணத்தை ஆதரித்து எழுதப் பட்ட தென்றே பல வாசகர்கள் கருதி விட்டதன் மீதே இந்த இதழில் இக்கட்டுரை எழுத வேண்டி நேர்ந்து விட்டது. முதலிலேயே இது அப்படி யெல்லாம் ஒன்று மில்லை என்று பட்டவர்த்தனமாக எச்சரித்திருந்தும் பலவாசக நண்பர்கள் அதைக்கவனித்ததாகத் தெரிய வில்லை.

இந்த விஷயம் உண்மையில் ஜோராக சாப்பிட்டு விட்டு 'சிகரெட்' குடித்துவிட்டு தமாஷாகப் பேசக்கூடியதல்ல. விஷய மென்னமோ பெரிதும் ஆலோசிக்க வேண்டிய தாகும். இது தோன்றி விட்டது. தேசமெங்கும் விரைவில் பரவி வருகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? அபேத வாதத்தை பற்றி பிரமாதமாக நீங்கள் வேலை செய்கிறீர்கள்.! காரணம் அது உங்கள் சட்டைப் பையைத் தொடுகிறது. நிர்வாணம் உங்களை எங்காவது தொடுகிறதா வென்பதை நீங்களே தான் யோசித்து முடிவு செய்ய வெண்டும்.

விஷயம் எவ்வளவு தூரத்தி லிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ இல்லையோ, அது சந்தேகம்தான். கடைகளில் இந்த விஷயத்தைப் பற்றி ஏராளமான புஸ்தகங்களும், பிரசுரங்களும், காணப்படுகின்றன வென்றும் ஜனங்கள் அவைகளை வாங்குகிறார்களென்றும், வாங்குவதோடு மட்டும் நிற்காது அவைகளை படிக்கவும் படிக்கிறார்கள் என்றும் நீங்கள் எனக்குச் சொல்வதில் பயனில்லை. ஓரளவுக்கு உங்கள் கூற்று சரிதான். ஜனங்கள் நிர்வாண சம்பந்தமான பிரசுரங்களைத் திரட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்பது உங்களுக்கும் எனக்கும் வெட்ட வெளிச்சமான ரகசியம். உங்களுக்குத் தெரியும். வாஸ்தவம், படங்களுக்காகத் தான்.

மிகவும் கவர்ச்சியான படங்களின்றி இந்த விஷயத்தைப் பற்றிய புஸ்தகமெதையும் நான் கண்டதில்லை. நீங்கள்!......

ஜெர்மன் போடோகிராபி, அமெரிக்கன் போடோகிராபி ஆகியவைகளடங்கிய பிரசுரங்களில் போடோக்கள் எவ்வளவு மேன்மையாக எடுக்கப் பட்டிருக்கின்றன வென்று ஆராய்ச்சி செய்வதில் பயனில்லை. டாக்டர்கள், லாயர்கள், ப்ரொபஸர்கள், பெரிய ராஜீய வாதிகள், தமாஷ் முதலியவிவகாரங்களில் கலந்து கொள்ளாதவர்கள் ஆகியவர்களெல்லாம் கூட அந்த பிரசுரங்களிலிருப்பதைக் காணலாம்.

இந்த 'வலை'க்குள் இவர்களெல்லாம் வரவேண்டியதன் காரண மென்ன? அவர்கள் சொல்வதுதான் என்ன?.

புதிதாக மாறினவர்கள் அறிக்கைகளிலிருந்து, இந்த இயக்கத்தில் சேர்ந்ததற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. ஆனால் நிர்வாணத்தின் முக்கிய அம்சம் இரண்டு உண்மைகள் மீதே சார்ந்திருக்கிற தென்றே கூறலாம். நிர்வாணம் உடலழகையும், உள்ளத்தின் அழகையும் விருத்தி செய்கிறது என்று சொல்லப் படுகிறது.

'உடைகள் நல்ல தேகாரோகியத்துக்கு பெரிய முட்டுக் கட்டைகள்'. என்று நிர்வாண இயக்கத்தினர் கூறுகின்றனர். பிரசித்தி பெற்ற டாக்டர்களும் இதை ஆதரிக்கின்றனர். சமீபத்தில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உடைச் சீர்திருத்த இயக்கம், சூர்ய ஸ்நான சிகிச்சைகள் இவைகள் இந்த உண்மை மீதே ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. உடையில்லை; வியாதி யில்லை — என்பதே நிர்வாண கர்த்தர்களின்" சித்தாந்தம்.

இந்த வாதத்தில் உண்மை யிருக்கிறது, என்பதில் சந்தேக மில்லை. இதை எவரும் மறுக்கவும் முடியாது. கிராமவீதிகளில் உள்ள குழந்தைகளையும், மலைக்காட்டு மக்களையும் நீங்கள் பார்த்தால், நிர்வாண இயக்கத்தினர் சொல்வது உண்மைதான் என்பது தெரிந்து விடும். உடைகள் உண்மையில் மோட்டார்கார்கள், ஆகாய விமானங்கள் இவைகளைப்போல செயற்கையானவைகளே. இவைகளெல்லாம் மனிதனால் செய்யப் பட்டவை. ஆக, திறந்து காண்பிக்கப் படும் சர்மம் தேகாரோக்கியத்தை விருத்திசெய்கிறது என்பதில் சந்தேகமில்லை. உண்மையான கஷ்டம் வேறு இடத்திலேயே ஆரம்பிக்கிறது.

மனம் பிரவேசிக்கும் போது தான் தொந்திரவு ஏற்படுகிறது. உடலைப் பற்றி மட்டும் இருந்திருந்தால் நிர்வாணத்தை எதிர்ப்பவர்களே இன்று ஒருவருமிருக்க மாட்டார்கள் என்றே நான் நம்புகிறேன். வெளி யிடங்களை விட்டு விட்டு வீட்டில் நிர்வாணத்தை அநுஷ்டித்தால் ஒருவருக்கும் ஆக்ஷேபனை யிருக்காது. ஒவ்வொரு குழந்தையும், ஆணு யிருந்தாலும் சரி, பெண்ணு யிருந்தாலும் சரி, குடும்பத்தின் இதர அங்கத்தினர்களைப் பார்க்க அனுமதிக்கப் பட்டே யாக வேண்டும்; விசேஷமாக பெற்றோர்களை, அவைகள் இளமைப் பருவம் அடையும் வரையில் நிர்வாணமாகப் பார்க்க வேண்டும். என்று ஸ்ரீமதி எதெல் மானின் (Ethel Manin) சொல்கிறாள். தனது சொந்த மகளுடன் அவளே அதை அநுஷ்டித்து வந்தாள். ஹாவ்லாக் எல்லிஸ் (Ellis) ஸாம் இதை அனேகமாய் ஆதரிக்கிறான். இது எல்லாராலும் அங்கீகரிக்கப் படலாம்; அல்லது அங்கீகரிக்கப் படாமலும் போய் விடலாம். ஆனால், ஒருவன் அல்லது ஒருத்தி தனிப்பட்ட முறையில் தனது உடலை காற்றுக்கும், சூரியனுக்கும் காண்பித்து வந்தால், அதைப் பற்றி ஒருவரும் ஆக்ஷேபனை சொல்ல மாட்டார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பையன்கள், சிறுமிகள் பிரம்மச்சாரிகள், கிருஹஸ்தர்கள் இவர்களெல்லாம் கும்பல் கும்பலாக ஒரே இடத்தில் கூடி நிர்வாணத்தை அநுஷ்டிப்ப தென்ற விஷயம்தான் சாதாரணமாய் கருதக் கூடியதல்ல.

'டென்வர் சன் ஷைன் லீக்' அங்கத்தினளான ஒரு அமெரிக்கப் பெண்மணி, இத்தகைய நிர்வாண இயக்கத்தை ஆதரித்து எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்.

''—பேத மற்ற ஒரு கூட்டத்தில் நாங்கள் சேர்ந்து விட்டோம். இதனால் உடலழகும், உள்ள அழகும் வளர்ச்சி யடைகின்றன. காட்டுமிராண்டித் தன்மையான காமஉணர்ச்சி இங்கு சேர்ந்ததிலிருந்து எல்லோரிடத்திலும் பெரிதும் குறைந்து விட்டதை நாங்கள் கவனித்தோம் .... அங்கத்தினர்கள், ஆண்களும் பெண்களும், "புனிதம் கெடாத குழந்தைகளை"ப் போல ஒன்றாகவே விளையாடுகிறார்கள். ஆண்களில் ஒருவர் என்னை குன்றின் உச்சியில் நிர்வாணமாக நிற்க வைக்கையில் எனது பெண் சரீரத்தைப் பார்த்து ரஸிப்பதற்காக அவர் அப்படிச் செய்கிறா ரென்று சொல்வதற்கில்லை. இதை சில மூடாத்மாக்கள் ஒப்புக் கொள்ளாது. எனது சிநேகிதி ஒருத்தி. அவளது அறை உடைகளை அவளது மருமான் தான் அவிழ்க்கிறான். இதிலும் ஒரு அசம்பாவிதமான எண்ணம் கிடையாது.

"இதனால் நிர்வாண இயக்கத்தின ரெல்லாம் சிற்றின்ப உணர்ச்சி யற்ற பொம்மைகள் என்று அர்த்தமல்ல. நிர்வாண இயக்கத்தின ரிடையில் இயற்கையான, பரிசுத்தமான சிற்றின்ப உணர்ச்சி இருக்கிறது. நல்ல அழகுள்ள பெண் உருவத்தைக் கண்டு விட்டால் போதும், எனது கணவர் அவளைப் பற்றி வர்ணிக்க ஆரம்பித்து விடுகிறார். நல்ல தேகாரோக்கியமும் கட்டு வாய்ந்த உடலையும் உடைய இளைஞர்களைக் காண்பதில் எனக்கு விருப்ப மதிகம். நாங்கள் சந்நியாசிகள் என்று சொல்ல வில்லை, ஆனால், உங்களை விட சற்று அதிகமான ஆத்ம பரிசுத்தமுடையவர்களா யிருக்கிறோம்; கற்பழித்தலில் எங்களுக்கு விருப்பம் குறைந்து விட்டது என்றே சொல்கிறோம்........".

இப்படியே அந்த அம்மணிக் சொல்லிகொண்டு போகிறாள். இதை நான் கொஞ்சம்கூட நம்ப முடியாது. இதை வைத்துக் கொண்டு நிர்வாணத்தை ஆதரிப்ப தென்பது எவராலும் ஒப்புக் கொள்ளக் கூடிய தல்ல.

இந்த அம்மணி கூறுவதைப் போலவே, இன்னும் பல நிர்வாண இயக்கத்தினர் கூறுகிறார்கள். இவர்கள் அனைவரும் 'வடிக் கட்டின புளுகர்கள்' என்பதே எமது அபிப்பிராயம். உடல் நலத்தைக் கருதி வேண்டு மானால் நிர்வாணத்தை ஆதரிக்கலாம். உள்ளத்தை உருப்படுத்துவது என்ற உண்மை மீது நிர்வாணத்தை ஆதரிப்ப தென்பது கடினமான விஷயம். இனி வருங்கால சந்ததிகள் வேண்டுமானால் இந்தப் பரிக்ஷையில் வெற்றி பெறலாம். ஆனால் தற்போதைய சந்ததிகளுக்கு உள்ள உயர்ச்சிக்காக நிர்வாண மென்பது வெறும் அபத்தக்கதை. அதுவும் சகோதரி மேயோ வர்ணித்த(அவள் வர்ணனையை அடியோடு ஆதரிப்பதாக யாரும் கருதிக் கொள்ளக் கூடாது) இந்தியாவில் இந்த 'புனிதம் கெடாத குழந்தைகள்' விளையாட்டு இயக்கம் வந்து விட்டால்......?

தேவை

சென்னை நகரம் பூராவும் நமது பத்திரிகையை விற்பனைச் செய்வதற்கு முன்பணம் கட்டக்கூடிய சோல் ஏஜெண்டு தேவை.

பூரா விவரங்களுக்கு எழுதவும்.

"சந்திரோதயம்" ஆபீஸ்.

வண்ணாரப் பேட்டை, சென்னை

786 "எம். எச்." பரிமள & அசல்

பட்டணம் பொடி

குணம், மணம், காரம், நிறம் இவைகள் ஒருங்கே அமைந்த "எம். எச்." பரிமளம் & அசல் பட்டணம் பொடியை வாங்கி உபயோகியுங்கள். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் இதன் அருமை நன்கு விளங்கும். விலை சரசமாயும் சரக்கு நல்லதாகவும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

அநேக தங்க மெடல்கள் பரிசு பெற்ற

கே. முஹம்மது உசேன் சாயபு

டெலிபோன் 4184.



தொழிற்சாலை:—

நெ. 48, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,

ஜி. டி. மதராஸ்.

தபாற் பெட்டி 135.

இந்த இதழிலுள்ள பிளாக்குகள் அவ்வளவும் கீழ்கண்ட விலாசத்தாரால் செய்யப்பட்டது.



வாசகர்களுக்கு

நமது பத்திரிகையின் 24-வது பக்கத்தில், டோரிஸ் நைல் என்ற நாட்டியக்காரியின் படத்தின் கீழுள்ள விஷயம் சில இதழ்களில் மட்டும் தவருக பிரசுரமாகியிருக்கிறது. ஆதலின் பின் வரும் முறையில் வாசகர்கள் அதைத் திருத்திப் படித்துக் கொள்வார்களாக.

"டோரிஸ் நைல்ஸ் என்றழைக்கப்படும் ஸெர்ஜி—லெய்லீ—ஒரு பிரபல பிரஞ்சு நாட்டியக்காரி, இவள் உடையலங்காரமும் உடலலங்காரமும் மனத்தை மயக்குகின்றன. (மற்றும் சில நாட்டியத் தோற்றங்களையும் 43, 44-ம் பக்கங்களில் காண்க.)

ராஜ்புத்-ரமணியில் சாந்தா ஆப்டே

நாட்டியம் *

"தாண்டவன்"

உதய சங்கரின் சிவ நடனம்

உடலின் அசைவில் லயம்; பெயர்க்கும் அடிகளில் பேரழகு—இதுதான் நாட்டியம்.

இந்த நாட்டியம் எப்போது தோன்றியது? உலகம் தோன்றுவதற்கு முன்பே நாட்டியம் தோன்றி விட்டது. நடராஜனது வெறிக் கூத்திலேதான் பிரபஞ்சங்கள் வெளிப்பட்டன.

*   *   *

நாட்டியம் புராதன காலத்தில் எப்படியிருந்தது என்பதைப் பற்றி ஒரு சிறு ஆராய்ச்சி.

நாட்டியம் அந்த நாட்களில் இந்தியர்களின் மத சம்பந்தமான தினசரி வாழ்வில் ஒரு அம்சமாக விளங்கியது. இந்தியர்கள் யாவரும் தங்களுக்குள் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாட்டை மறந்து, அப்போது மதத்திற்கு கௌரவமளித்தனர். மதத்தின் கொள்கைகளும், தத்துவங்களுமே அப்போதுள்ள கலையுலகத்திற்கு ஜோதி அளித்தன. கவிஞர்கள், சில்பிகள், சைத்ரிகர்கள் ஆகியவர்கள் 'வேலைகளில்' முக்கால் பகுதி மதசம்பந்தமானவைகளே. வேதம், உபநிஷத்துகள், ராமாயணம், மஹாபாரதம் ஆகியவை இந்திய நெறிக்கு (Culture) அழியாத சாட்சிகளாக விளங்குகின்றன.

அஜாந்தா, எல்லோரா, பாக்காக், எலிபெண்டா ஆகிய இடங்களிலுள்ள வசீகரமான இந்திய சித்திரங்கள், புராதன இந்தியர்களிடம் மதம் எவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிருந்தது என்பதை பளிச்சென்று எடுத்துக் காட்டுகின்றன.

மதம் கலை மூலமாக பிரசாரம் செய்யப்பட்டது. கலை மதம் பூராவும் பரிமளித்தது.

இந்தியாவிலுள்ள எல்லா மக்களும் கலையின் எல்லா வேலைகளையும் ரஸிக்கும் ஞானமுடையவர்களாக இருந்தார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் கலைஞர்களும கவிஞர்களும் பொதுஜன உள்ளத்தைக் கவர இடையரு முயற்சி செய்து வந்தார்கள் என்றே சொல்கிறேன். "கலை கலைக்காகவே" என்பது அவர்களுக்குத் தெரியாத ஓர் உண்மை. மனித வாக்கத்திற்காக கலை என்ற சித்தாந்தத்தின் மீதே அவர்களது தினசரி வாழ்வு நடந்து சென்றது.

அஜந்தாவின் சாகா வரம் பெற்ற வர்ணச் சித்திரங்கள் இன்றும் புத்தன் ஜாதகக் கதைகளை காண்பிக்கின்றன. அவைகளில் கலையழகு ஒரு புறமிருக்க கல்வி பயிற்றும் சக்தியும் இருக்கின்றது. எல்லோராவின் சிற்பங்களிலிருந்து சிவ மதத்தைப்பற்றி நாம் வேண்டியது திரட்டிக்கொள்ளலாம். சிவன் இங்கு பல்வேறு உருவங்களுடனும், தோற்றங்களுடனும் காணப்படுகின்றான். புராதன சின்னங்களாகிய இவைகளில், அந்த நாட்களில் மக்களிடை சர்வ சாதாரணமாய் படிந்து கிடந்த கலா சௌந்தர்ய உணர்ச்சியையும், தெளிந்த அறிவையும் எடுத்துக் காட்டுகின்றன.

அஜந்தா, எல்லோரோ, எலிபெண்டா, தாரமங்கலம் இன்னும் நமது தென்னிந்தியக் கோயில்கள் இவைகளிலுள்ள சின்னங்களைப் பார்க்கும் போது நடனம் என்பது புராதன இந்தியாவில் எவ்வளவு உயரிய நிலையில் இருந்து வந்தது என்பதைக்கண்டு கொள்ளலாம்.

* நடனத்தைப் பற்றிய படங்கள் பிரத்தியேகமாக 21-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மற்றெல்லாக் கலையும் போலவே இந்தக்கலையும் இன்று மறைந்து விட்டது. ஆனால் இவைகளுக்கு மீண்டும் புத்துயிரளிக்க வேண்டும். இறந்த காலம் மீண்டும் அழியாத சக்தியாகி நமது எதிர் காலத்தை சிருஷ்டிக்க வேண்டும்.

இந்தியாவில் புராதன நாட்டியக் கலை தெய்வ வணக்கத்திலேயே முக்கிய ஸ்தானத்தை வகித்து வந்தது. மேனாடுகளும் இதற்கு விதி விலக்கல்ல. புராதன எகிப்து, கிரீஸ், ரோம்...... முதலிய சாம்பிராஜ்ஜியங்களின் சரித்திரங்களை சற்று நுணுகிப் பார்த்தால், தேவப் பிரார்த்தனையில் நடனமே பெரும் பங்கு கொண்டது என்பது நன்கு புலனாகும்.

ஆக, நாட்டிய மென்பது புராதன காலத்தில் மத சடங்குகளில் மிகவும் முக்கியமான தொன்றாக இருந்து வந்தது. இந்தியாவில் மட்டுமல்ல; எங்கும்.

* * *

நாட்டியம் எங்கும் ஒரே மாதிரியாய் இருக்காது என்பதும் முக்கியமான விஷயம். ஒரு நாட்டின் நாகரிகம், நெறி, கொள்கைகள், சித்தாந்தங்கள், மதம் இவைகளைப் பொறுத்தே நாட்டியத்தின் தன்மையுமிருக்கிறது. இதன் காரணமாகவே இந்தியாவின் நடனம் உலகத்தின் நடனங்களுக்கு தலைமை வகிக்கிறது. ஏனெனில் இந்தியாவின் கலையும், நாகரிகமும், நெறியும், இலக்கியமும், மதமும், ஞானமும் மஹா உத்தமமானவை.

* * *

நாட்டியத்தில் சிவ நடனமே தலை சிறந்தது. இணையற்றது. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய முத்தொழிலுக்கு மூலசக்தி சிவன். இதைச் சித்தரிப்பதே சிவ நடனம்.

* * *

உதய சங்கர் சிவ நடனத்தில் பெரிதும் வெற்றி பெற்றுள்ளார். மணிவர்த்தன் என்ற வங்க நாட்டியக்காரரும் பெரும் புகழ் பெற்றவர். இவர் அஜந்தா நடனம், சோமதேவ, ருத்ர, ரூபகுமார், சிவ நடனம்—ஆகியவைகளில் பிரசித்தி பெற்று விளங்குகிறார்.

அஜாந்தா நடனம் என்பது பௌத்த நெறியைச் சித்தரிப்பது. ஏகாந்தத்தின் கோயிலே நடனமாடி, தனது பெரிய தத்துவமான நிர்வாணம், அழகு இவற்றின் பாதங்களில் தன்னைச் சமர்ப்பித்துவிடுவதாகும்... சோமதேவ நடனம் என்பது புராண சம்பந்தமானது. தனது பூரண பிரகாசத்துடன் சந்திரன் நடனமாடுவதை நாம் சற்று சிந்தித்துப் பார்த்தால், இதன் வசீகரத்தைப் பூராவும் ரஸிக்கலாம்.

ருத்ர நடனம்—ருத்திரன் மேகம், புயல்காற்று இவற்றின் கடவுள். மலைகள்மீதும், கடல்கள்மீதும், மற்றும் எந்தப் பொருட்களின்மீதும் இரக்கமின்றி நடனம் செய்கிறான். இதை நடனத்தில் காட்டுவது.

ரூபகுமார் நடனம்—நமது கற்பனை உலகத்தில் தோன்றிய இன்ப மகன். அவன் அடிகளில்தான் அண்டத்தின் அழகுகள் வளர்கின்றன. அவன் சஞ்சல முகத்தினைப் பிரியும் போது அண்டங்களெல்லாவற்றிலும் துயரம் பரவுகிறது.

''இந்த 5 விதமான நடனங்களையும், மணிவர்த்தன் மிகவும் சிறப்பாகச் செய்கின்றார். இவர் ஒரு பெரிய கலைக் கர்த்தர்'' என்று ஸ்ரீ அஜயகுமார் பட்டாச்சார்யா எம். ஏ. கூறுகின்றார்.

இன்னும் வங்காளத்தில் *ஸ்ரீமதி கமலேஷ் குமாரி என்பவள் இந்திய நாட்டியக் கலையின் மறு மலர்ச்சிக்கு பெரிதும் உழைத்து வருபவள். இவள் சர்வ தேசங்களிலும் புகழ் பெற்றவள்.

தென்னிந்தியாவிலும் ஸ்ரீமதிகள். சுவர்ண சரஸ்வதி, பால சரஸ்வதி இவர்கள் நாட்டியக் கலையில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளனர்.

* * *

மேனாட்டு ஆபராக்களில் நடனக் கலை நன்கு போஷிக்கப் படுகிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் பல்வேறு விதமான உணர்ச்சிகளை இந்த ஆபராக்கள் சிருஷ்டிக்கின்றன. உணர்ச்சி விலாஸங்களை அலைகள்போல எழுப்பி, நம்மை சுற்றியிருப்பவைகளை நிமிஷத்தில் மறக்கடிக்கச் செய்வது மேனாட்டு நடனம் என்று கூறினால் என்மீது யாரும் கோபங்கொள்ளக்கூடாது. நமது நாட்டியக் கலை தலை சிறந்த தாயிருக்கலாம். ஆனால் இன்று அதன் சிறந்த அம்சங்களை நமக்கு பரிபூர்ணமாக எடுத்துக் காட்டுபவர் ஒருவரும் இல்லை. இருக்கும் உதய சங்கரின் நடனம்கூட பெரும்பாலும் மேனாட்டு நடனங்களின் சாரம்தான். இதைக்கொண்டு தான் அவர் இந்திய நாட்டியக் கலைக்கு மீண்டும் உயிரளித்து வருகிறார். மேனாட்டு நாட்டியத்தில் தான் இன்று ஜீவசக்தி உச்சஸ்தானத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

* * *

நாட்டிய மாடுபவர்களில் ஆண்கள் கூட்டத்தில் ஸ்ரீ உதயசங்கர் ஒருவரே அற்புதமான உடலழகைப் பெற்றுள்ளார். கடைந் தெடுத்தது போன்ற

*இவர் 'சந்திரோதயத்' துக்கென பிரத்தியேகமாக எழுதிய கட்டுரை அடுத்த இதழ்களில் பிரசுரமாகும்.

உடலும் காவியக் கண்களும் இவர் ஒருவருக்கே சொந்தம். உட லழகினுலேயே சங்கரின் நாட்டியத்துக்கு மேன்மை அதிகரிக்கிறது.

இந்தியப் பெண்களை எடுத்துக்கொண்டால் எனக்குத் தெரிந்த வரையில் 'தென்னிந்தியாவில் நாட்டியத்துக்கு ஏற்ற உட லமைப்புப் பெற்றுள்ளவர் ஸ்ரீமதி. ருக்மணிதேவி ஒருவர்தான். பலருக்கு இது திகைப்பை யளித்தாலும் உண்மை யென்னமோ இதுதான்.

மென்காற்றில் மிதந்துசெல்லும் எழிலையும்; ஆனல் அதே சமயம் சண்டமாருத்தின் சக்தியையும் கொண்ட உடலை நாட்டியம் ஆடும் அவனும் அவளும் பெற்றிருக்கவேண்டும். சோலை மலர் ஒளி போன்ற சுந்தரப் புன்னகையும், பாம்பின் மாயக் கண்களும், மஹா சக்திகளின் சாயையும் அவர்களுக்கிருக்க வேண்டுவது அவசியம்.

நமது நாட்டு நாட்டியப் பெண்களுக்கும், மேனுட்டு நாட்டியப் பெண்களுக்கும் உடல் அழகில் அணுவுக்கும் மலைக்குமுள்ள வித்தியாசம் உண்டு. மேனுட்டு நாட்டியப் பெண்களின் உடல் ரப்பரைப் போல் வளைந்து கொடுக்கக் கூடியது. உடலின் ஜிலுஜிலுப்போ அற்புதமானது. அதரங்களில் தவழும் புன்னகையோ ஆண்மையை ஆட்டி வைக்கக் கூடியது. அந்தப் பெண்கள் உடல் அழகை வளர்ப்பதில் ஓய்வின்றி சிரத்தை காட்டி வருகின்றனர். ஆனல் இங்கோ இந்த விஷயம் 'பூஜ்ஜியம்'. அப்படி கட்டுமஸ்தாய், அழகான உடல்களைப் பெற்றுள்ள ஒன்றிரண்டு நாட்டியப் பெண்களோ சினிமா மேடை மீது தோன்றி சில்லரை நாட்டிய மாடுபவர்களாயிருக்கின்றனர். பொதுவாக நாட்டியக் கலை வளர வேண்டுமானல் உடல் அழகு வளரவேண்டும். பின்னரே நாட்டியக் கலை அதில் சான்னித்தியமாகும்.

* * *

நாட்டியத்தில் பலவிதம். இதில் மேனுடுகளில் கடினக் கூத்து என்பதே பெரிதும் பாராட்டப் படுகின்றது. ஆண்களால் நினைக்கக்கூட முடியாத அளவுக்கு அந்த மேனுட்டுப் பெண்களின் கடினக் கூத்து இன்று அமைந்துள்ளது.

சங்கரின் மற்ருெரு நடனம்

* * *

மின்னல் போல் துள்ளும் உடலின் வேகத்திலே, அண்டாண்டங்களையும் சுழல வைத்து அப்படியே ஸ்தம்பிக்கச் செய்யும் கண்ணின் கடைக்கோணத்தின் வீச்சிலே, உலகத்தின் உணர்ச்சிச் சக்திகளை உயிர்கொண்ட சித்திரங்களாக்கும் அங்கங்களின் பாவத்திலே, ஆனந்தக் கடலில் மூழ்த்தும் அடிகளின் மது வெறியிலே நெஞ்சத்தை பறி கொடுக்காதவர் யாரிருக்க முடியும்?

* * *

இனி, நாட்டியத்தின் அம்சங்கள். அதன் தத்துவம், நாட்டிய சங்கீதம், மேனுட்டு நாட்டியமும் கீழ் நாட்டு நாட்டியமும், இரண்டு நாடுகள் சங்கீதத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை முதலிய விஷயங்களைப்பற்றி எழுதி வருவேன்.



பக்தனும் கலைஞனும்

"இளங்கோவன்"

சக்கரவர்த்தியின் சந்நிதானம்

அன்றுதான் அந்த வந்த தான்சென் தனது கோமளமான விரல்களால் வீணையை மீட்டிப் பாடிக்கொண்டிருந்தான். அவனது சங்கீதம் வீணையின் கானத்தோடு விரவி, மெல்லிய பூங்காற்றைப்போல் ஆஸ்தான மண்டபத்தில் பரவி நிறைந்தது. எந்தும், எப்போதும், எதனாலும், அசைக்க முடியாத பிரபுக்களது உள்ளம்கூட அன்று அசைந்து, ஆடி உருகிப்போய் விட்டது. "உன்து அற்புதமான தேவகானத்திற்கு எனது ஹிருதயம் இன்று அடிமையாகி விட்டது" என்று அக்பரும் சொல்லிவிட்டான்.

இப்போது தான்சேனுக்குச் சம்பளம் ஆயிரம் பொன் மொஹராக்கள். அவன் தலை யசைக்க வேண்டியதுதான் தாமதம்! அடிமைகளும், அஸ்வங்களும், யானைகளும் பணிசெய்யத் தயாராக விருந்தன. தான்சென் வந்ததுமுதல் பகல்போல் தூக்கமின்றி இரவுகள் கழியலாயின. அதிகம் வர்ணிப்பானேன்? இரவுகள் சங்கீத விருந்துகளாகவே மாறிப்போய் விட்டன. தான்சேனும் உல்லாஸத்துடனும் அகந்தையுடனும் அரண்மனையிலிருந்து வந்தான்.

ஆனால் அதற்குள் சலிப்பு வந்துவிட்டது. சங்கீதத்தில் முன்பிருந்த பிரேமையும், உற்சாகமும் இப்போது யாருக்கும் இல்லை. தான்சேனுக்கே கொஞ்சம் வெறுப்புத் தட்டிவிட்டது. "சில நாட்கள் ஓய்வளிக்கவேண்டும்" என்று தான்சென் அக்பரை வணங்கிக் கேட்டுக்கொண்டான். சக்ரவர்த்தியும் அப்போது சில யுத்தங்களையும், சில சில்லறை இராஜ்ஜிய விவகாரங்களையும் கவனிக்கவேண்டியவராக இருந்தார். "சரி! உன்னிஷ்டம்போல் ஓய்வெடுத்துக்கொள்" என்று அக்பரும் சொல்லி விட்டான். மறுநாளே தான்சென் வீணையுடன் வேறு தேசங்களுக்குப் பிரயாணப் பட்டுவிட்டான்.

பல தேசங்களில் சுற்றிவிட்டுத் தான்சென் வடமதுரை வந்து சேர்ந்தான். அப்போது கமலக் கண்ணன் ஆயர்குலக் கோமளங்களுடன் குழலூதியும், கைகோத்தும், நீர் விளையாடியும் விளங்கிய காட்சிகளை, இப்போதும் யமுனா நதி ஞாபகப் படுத்திக்கொண்டிருந்தது. அந்த நீல நதியைக் கண்டதும் தான்சென் உள்ளத்தில் விதவிதமான உணர்ச்சிகளும், நவநவமான கனவுகளும் தோன்றிப் பாய்ந்தன.

அங்குதான் மஹாத்மா ஹரிதாசர் ஓர் மண் குடிசையில் அமர்ந்திருந்தார். அவர் முன் ஒரு பீடத்தின்மீது நீலவண்ணனது விக்கிரஹம் நின்றுகொண்டிருந்தது. சிலையின் எதிரில் ஹரிதாசரும், அவரைச் சுற்றி நின்ற சிஷ்யர்களும் கிருஷ்ணனது லீலைகளைப் பாடி ஸ்தோத்தரித்துக் கொண்டிருந்தனர். பாட்டின் சப்தத்தைக் கேட்டதும் தான்சென் பெரு

மிதத்துடன் குடிசைக்குள் நடந்து சென்றான்.

தான்சேனை பக்தர் கண்டார். அப்போதே அவன் மனதில் ததும்பிக் கொண்டிருக்கும் கர்வம் ஹரிதாசருக்கும் தெரிந்துவிட்டது. மறுவினாடியே தாம் பாடிக்கொண்டிருந்ததை வேண்டுமென்றே நிறுத்திக் கொண்டார். தான்சேனுக்கோ கோபம் கொந்தளித் தெழுந்தது. அவன் அறிவிழந்து விட்டான். சரேலென்று வெளியே வந்து, கரித்துண்டால் ஹரிதாசரைப்பற்றி மனம்போனவாறு வசவுச் சொற்களை சுவற்றில் எழுதி, அப்பால் சென்று விட்டான் தான் சேன்.

மறுநாட் காலை. சந்நியாசிகள் தங்கள் காலைக் கடன்களை முடித்துவிட்டு ஆச்சிரமத்திற்குத் திரும்பினர். அப்போதுதான் சுவற்றில் எழுதப் பட்டுள்ள எழுத்துக்களின் மீது அவர்கள் கண்கள் சென்றன. மஹாத்மா ஹரிதாசரின் தெய்வத்தன்மையுள்ள சங்கீதத்திற்கு நேர்ந்த இழிவையும் அவமானத்வையும் கண்டு அவர்கள் உள்ளம் துடித்தது. இவ்விஷயத்தை ஹரிதாசரிடம் கூறினார்கள்.

ஹரிதாசர் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் வதனத்தில் சிந்தனையும், துயரமும், புன்சிரிப்பும் தோன்றித் தவழ்ந்தன. வாய் திறக்கவில்லை. வழக்கம் போல் மணிகள் சென்றுகொண்டிருந்தன. மாலைப்போதும் வந்து விட்டது.

மீண்டும் தான்சேன் அங்கு வீணையுடன் வந்து சங்கீதத்தைப் பொழியலானான். அவனது பாடல்களில் இன்பமும் துன்பமும் கலந்து ஒலித்தன.

அவன் பாடினான். இளங்காற்று ரமணீயமாக வீசியது. வசந்தன் நகைத்தான். வனப்பு மிகுந்த கோடைகால வானத்தில் குளிர்ந்த மேகங்கள் பரவின. தீபங்கள் சுடர்விட்டு ஜ்வாஜ்ஜல்யமாகப் பிரகாசிக்கத் தொடங்கின. மஹாத்மா ஹரிதாசரின் ஹிருதயம் தான்சேனது சங்கீதத்தில் முழுகிவிட்டது. "சபாஷ்" என்று அடிக்கடி சொல்லிவந்தார் ஹரிதாசர். சிஷ்யர்களது வாயோ இப்போது மூடிப்போய்விட்டது. அவர்களுக்கு ஆச்சர்யம் ஒரு புறம்; அவமானம் மற்றொரு புறம். ஒன்றும் புரியாமல் தான்சேன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

தான்சேன் பாடி முடித்துவிட்டான். "பாபுஜீ! தங்கள் பாட்டைக் கேட்க என் ஹிருதயம் அடித்துக் கொள்ளுகிறது. தாங்கள் ஓர் அற்புதமான பாடகர் என்று ஜனங்களெல்லாம் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனபோதிலும் நேற்று மாலை உங்கள் சாரீரம் சரியான நிலைமையிலில்லை யென்றே நான் எண்ணுகிறேன். தங்களது புகழும், கீர்த்தியும் எனது காதுகளில் விழுந்த போதெல்லாம், பொறாமையும் கோபமும் எனது அகத்தில் பொங்கி யெழுந்ததுண்டு. ஆதலின் பாபுஜி! தங்கள் பாட்டை நான் கேட்க விரும்புவது ஓர் ஆச்சர்யமல்லவே" என்று சொன்னான் தான்சென்.

அது சமயம் ஹரிதாசர் உள்ளம் துயரத்தால் வருந்தியது. தனக்குள்ளேயே யோசிக்கலானார்; "இங்கு ஓர் பரிசுத்தமான ஜீவன் இருக்கிறது. ஆனால் அப்புனித மெல்லாம் கலையில் மட்டுந்தான் அடங்கியிருக்கிறது. ஆ, ஹா! அந்தப் புனிதம் ஹிருதயத்திலும் நிறைந்திருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்! கண்ணா! உன்னருளால் கலையிலுள்ள பரிசுத்தம் இவனது ஹிருதயத்திலும் கலந்து நிற்கட்டும்" என்று வேண்டினார்.

ஹரிதாசர் முகத்தில் நகை மலர்ந்தது. "நாங்களெல்லாம் பட்டிக்காட்டு ஆஸாமிகள். எங்களுக்கு சங்கீதம் யாரும் கற்றுக்கொடுக்கவில்லை. எந்தவித சாமர்த்தியமும் எங்களிடம் இல்லை. ஐயா! சாரீரமும், சாரீர மல்லாததும் எங்களுக்கு எப்படித் தெரியப் போகின்றது? தாங்களோ சக்கரவர்த்தின் ஸமஸ்தானத்திலுள்ள மஹா வித்வான். சங்கீதக் கலைஞானமும், நுட்பங்களும் நன்கு உணர்ந்தவர். நாங்கள் என்னத்தைப் பாடப்போகிறோம்?" என்று சாந்தத்துடன் ஹரிதாசர் பதிலளித்தார்.

ஆனால் தான்சேனோ ஹரிதாசரை விடுகிறவனாக யில்லை. ரொம்பவும் வற்புறுத்திக் கெஞ்சலானான். ஹரிதாசரும் இப்போது பாடுவதற்குச் சம்மதித்துவிட்டார். சிஷ்யர்களோ பிரார்த்தனை செய்யத் தொடங்கிவிட்டார்கள்:—"ஹே, கிருஷ்ணா! கலையை விற்றுப் பிழைக்கும் இவனிடம் உனது தொண்டர்களின் பாடல்கள் தாழ்வுறுமோ? இல்லை; நீ அவ்வாறு செய்துவிடக்கூடாது. ஹரே கிருஷ்ணா! நின் புகழல்லாமல் வேறு எதையும் எங்கள் உள்ளம் பாடியதில்லை. உனக்காக எங்கள் ஹிருதயத்தினின்று எழுகின்ற பாட்டுக்களைவிட சிறந்தவைகளா இக்கலை விற்போனது பாடல்கள்? ஓ! ஒருபோதும் அப்படியிருக்க முடியாது. தொண்டர்களது கீர்த்தியைக் காப்பாற்றும் பொறுப்பு இப்போது உன்னிடம்தான் இருக்கிறது. உனது தொண்டர்கள் இந்தக் கலை விற்பவன் முன்பு அவமானப்படக் கூடாது."

மஹாத்மா ஹரிதாசரின் ஹிருதயத்தில் ஆண்ட

வன் கட்டளை பிறந்துவிட்டது. ஹரிதாசர் தமது சாரங்கியைக் கையிலெடுத்துக்கொண்டார். எல்லையற்ற அன்புடையவனும், எங்கும் உள்ளவனும், சர்வ சக்தி யுள்ளவனும், துன்பமாய், இன்பமாய், நன்றாய், தீதாய், அறிவாய், ஞானமாய், ஆலமாய், அமிர்தமாய், மஹத்துக்கெல்லாம் மஹத்தாய், அணுவுக்கெல்லாம் அணுவாய் இலங்கும் ஆண்டவன் லீலைகளைப் பாடத் தொடங்கி விட்டார் ஹரிதாசர்.

இப்போது ஹரிதாசர் இளவேனிற் காலத்து இரவில் கண்ணன் செய்த நடனத்தைப் பற்றிப் பாடிக்கொண்டிருக்கிறார்.

“நீலவானக் கடலில் பூர்ணச் சந்திரன் வெள்ளித் தகடென மிதந்து ஜொலிக்கிறான்.

மல்லிகைகள் மலர்ந்து மணம் வீசுகின்றன. சந்திர வெளிச்சத்தில் யமுனா நதி தோன்றும் காட்சி வர்ணனைக்கும் எட்டாதது. நக்ஷத்திரங்களைப் போல் மிளிரும் கார் வண்ணனது கண்கள் முன் கபடமும் தீமையும், கோபமும் மாய்ந் தொழிகின்றன. கண்ணனது குழலோசை லோகத்திலிருக்கும் ஒவ்வொரு பக்தனுக்கும் கேட்கின்றது. அவனிடம் காதல் கொண்ட பரிசுத்தவதிகளான கோபிகைகள் தங்கள் உடலை மறந்தனர்; உள்ளத்தை மறந்தனர், உயிரைக்கூட மறந்து சவமாகி வீழ்ந்து விட்டார்கள்.

பச்சை வண்ணன் இப்போது தனது குழலோசையை வேறுவிதமாகத் திருப்பிவிட்டான். கன்னிகைகள் உயிர்பெற்றெழுந்து கண்ணனைச் சுற்றிக் கூத்தாடுகின்றனர்”

என்பதுதான் அப்பாட்டின் கருத்து.

ஹரிதாசர் தன்னையும் மறந்து பாடிக்கொண்டிருக்கிறார். சிஷ்யர்களெல்லாம் நடனமாடிக் கொண்டிருக்கின்றனர். ஆ! ஆ! அற்புதம்! நீலவண்ணனது விக்கிரஹம் அசைகிறது! அது உயிர்பெற்றுவிட்டது. அது பீடத்தினின்றும் இறங்கி வந்து நடனத்தில் கலந்துகொண்டது. அங்குள்ள ஒவ்வொரு அணுவும் ஆனந்த நடனம் செய்வதுபோல் தோன்றியது.

இந்த தெய்விகக் காட்சியைக் கண்ட தான்சென் உள்ளமும் உயிரும் உருகிவிட்டது. அவமானத்தால் முகத்தைக் கைகளால் மறைத்துக்கொண்டு விம்மி விம்மி யழுதான். “கண்ணன் கழலிணையில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து தன்னை மன்னிக்கும்படி கெஞ்சினான்.” எனக்கு நீ ஒன்றும் தவறிழைக்கவில்லை. எனது தொண்டனுக்குத்தான் இழைத்தாய். அவனது மன்னிப்பை எப்படியாவது பெற முயற்சி செய்” என்று பகவான் கிருஷ்ணன் கூறி விட்டான். விக்கிரஹம் பழையபடி பீடத்தின்மேலேறி நின்றுகொண்டது.

ஹரிதாசர் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது. ஓடிச்சென்று தான்சேனை எடுத்து மார்பிறுகத் தழுவிக்கொண்டார். “ஒளிக்கெல்லாம் ஒளியை, இனிமைக்கெல்லாம் இனிமையை, உயிர்க்கெல்லாம் உயிரை, உன்னை லல்லவோ இன்று நாங்கள் கண்டு களித்தோம்? என்று கூறி ஹரிதாசர் தான்சேனை வாழ்த்தினார். தான்சேனும் விடைபெற்றுக் கொண்டான்.

தான்சென் உடனே அக்பரை யடைந்து, தாழ்மையுடன் தான் கண்ட அற்புதத்தைச் சொன்னான். தனது பணியாள் பெற்ற பாக்கியத்தை தானும் பகிர்ந்துகொள்ளவேண்டி ஹரிதாசரது மண் குடிசைக்கு சக்கரவர்த்தி அக்பர் வழி நெடுக நடந்தே சென்றான்.

மனதில் மகிழ்ச்சியும் பக்தியும் பொங்க, சக்கரவர்த்தி ஹரிதாசரது குடிசைக்குள் நுழைந்தான். ஹரிதாசரும் அக்பரை வரவேற்று, “சக்கரவர்த்தி! உனது வரவால் எங்கள் குடிசை இன்று புனிதமடைந்து விட்டது. அறிவும் ஆற்றலும் உன்னுள்ளத்தில் ஓங்கி வளரட்டும். உன்னுடைய தான்செனுக்கு உன்னிடத்திலுள்ள எல்லா சக்திகளையும் அளித்து விட்டேன். உனது பெயரும், தான்சென் பெயரும் உலக சரித்திரத்தில் என்றும் பிரகாசிக்கும்” எனச் சொல்லி ஆசீர்வதித்தார்.

தான்சென் அகத்திலிருந்த அந்தகாரம் அழிந்தது. அறிவுடனும், ஆற்றலுடனும், தாழ்மையுடனும் சக்கரவர்த்தி அக்பர் அரண்மனை திரும்பினான். அவனது ஆட்சியின் கீழ் ஹிந்துஸ்தானம் செல்வத்திலும், சிறப்பிலும், களிப்பிலும் முழுகிக் கிடந்தது. அவன் நாமம் வாழ்க!

வந்தேமாதரம்.

"டாக்கி"யின் கதை*

(ஸ்ரீ. நீலகண்டன்)

பேசும் படத்திற்கு முதல் வழிகாட்டி யார்? முதல் பேசும் படம் எது? பேசும் படத்தில் நடித்த முதல் 'நக்ஷத்திரம்' யார்? இந்தக் கேள்விகளுக்கே இந்தக் கட்டுரை பதிலளிக்கிறது.

*   *   *

"பேசும் படங்கள் ஒரு தோல்வி"

சில வருஷங்களுக்கு முன்பு வார்டர் வீதியில் அவர்கள் அப்படித் தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள். 'ஆமாம்' என்று பலரும் தலையாட்டினர்கள். ஆனல் அவர்கள் அப்படிச் சொன்னதில் தவறென்றுமே கிடையாது.

1913-ம் வருஷத்தில் படங்களைப் பேச வைக்கச் செய்த முயற்சி ரொம்பவும் வெட்கக் கேடாக முடிந்தது. நடிகன் உதடு திரைமீது அசையும் சமயத்தில் கிராமபோன் ரிகார்டு மூலம் சம்பாஷணைகளை வெளிப்படுத்துவது என்ற கருத்து சொல்வதற்கு சுலபமாயிருந்தது. ஆனல் செய்கையில் அது மிகவும் கஷ்டமான ஒரு விவகாரமாகி விட்டது. அது மாதிரி ஏழு எட்டு விதங்களில் படங்களைப் பேச வைக்க முயற்சிகள் செய்யப்பட்டன.

முதலில் ஆபரேடர் (படம் காண்பிப்பவன்) அறையில் ஒரு கிராமபோனும், திரையண்டை ஒரு கிராமபோனும் வைக்கப்பட்டு அதற்கும் இதற்கும் ரப்பரால் சம்பந்தப்படுத்தி, படங்கள் பேசுவது போல் முயற்சி செய்யப் பட்டது.

நடிகர்கள் உண்மையில் இந்த ரிகார்டுகளைச் செய்வதில்லை. இவைகள் ஏற்கனவே செய்து விற்கப்பட்டன. காமிரா முன்பு நடிகன் வெறும் வார்த்தைகளையே சொல்லிக்கொண்டு வந்தான். இவைகளால் ஏற்பட்ட பலன் திருப்திகரமானதாக இல்லை. இப்போது இருக்கும் ஒலி பெருக்கியின் சப்தம் கிராமபோன் ரிகார்டுக்கு அப்போது இல்லாமற் போய் விட்டது. திரைமீது நடிகர் எந்த நிலையிலிருந்தாலும் அவரது 'குரல்' மட்டும் எப்போதும் வாத்தியங்கள் வாசிக்கும் இடத்திற்கும், திரையை யடுத்து வெளியே போகும் வழிக்கும் இடையிலுள்ள எங்கோ இருந்துதான் கிளம்பிற்று.

*   *   *

பிரிக்ஸ்டனிலுள்ள ஆராய்ச்சி சாலையில் பிரஞ்சு விஞ்ஞானியாகிய ஈஜின் லாஸ்ட் (Eugene Lauste) என்பவர் படச்சுருளையில் ஒலி யேற்றும் கருவியைக் கண்டு பிடித்தார். பொதுவாக இன்று ஒவ்வொரு டாக்கி தியேட்டரிலும் உள்ள யந்திரங்கள் இதன் அமைப்புகளையே அடிப்படையாக பெரும்பாலும் கொண்டதாகும். மைக்ரபோன்கள் நடிகர்கள் குரல்களை ஆகர்ஷித்துக்கொண்டன. ஒலிச் சலனங்களின் உருவம் போடோ மூலமாக படச்சுருளையில் 'ரிகார்டு' செய்யப்பட்டது. இதில் இரண்டே குறைகள் தானிருந்தன. ஒன்று ரேடியோ அலைகள் மூலமாக ஒலியை பெருக்குவது கிடையாது. அதற்குப் பதிலாக துருத்திகளை வைத்து, குழாய்கள் மூலமாக தியேட்டரில் இந்த சப்தம் அதிகப் படுத்தப் பட்டது. மற்றென்று பொதுஜன நம்பிக்கையற்றுப் போனது.

கீத வாத்திய விநோதங்களுடன் கூடிய மௌனப் படம் உள்ளத்திற்கு மட்டற்ற சந்தோஷத்தை அளித்து வந்தது. 'பேசுவதாகச் சொல்லப்பட்ட படம்' ஒரே கண்ட்ருவியில் முடிந்து விட்டது. 'கிரிச்சென்றும், ஞொர ஞொர' காகா வென்றும் கிர்ர்ர் என்றும் தெளிவல்லாத சப்தங்கள் படம் பார்க்க வருபவர்களின் காதுகளைத் துளைத்து விட்டன. பொது ஜனங்களால் சகிக்க முடியாமற் போய் விட்டது. பேசும் படத்தில் ஏதோ குறையிருக்கிறது 'என்பதை உணர்ந்த ஜனங்கள் அதைப் பார்ப்பதையே நிறுத்தி விட்டனர். லாஸ்டும் ஏமாற்றமடைந்து விட்டார். இந்த நிலையில் 10 வருஷங்களுக்கு டாக்கி அபிவிருத்தியில் தாமதம் ஏற்பட்டது.

அதற்குள் இந்த தோல்வி விஞ்ஞானிகளின் மூளைகளை மங்க வைத்து விட்டது. 1924வது வருஷ ஆரம்பத்தில் டாக்டர். லீ. டி. பாரஸ்ட் (Dr. Lee De Forest) என்பவர் மற்றொரு 'டாக்கி' யந்திர முறையைக் கண்டு பிடித்ததோடு, "காதலின் பழைய இன்பப் பாட்டு" என்ற இரண்டு சுருளைகள் கொண்ட ஒரு படத்தையும் தயாரித்தார். இதில் பூனெ மெர்க்கல் கதாநாயகி வேடத்தில் நடித்தாள்.

இதைப்பற்றி அவளே பின் வருமாறு சொல்லியிருக்கிறாள்:—

"பேசும் படங்கள் இப்போது ரோஜா மெத்தைகளாகி விட்டன. முன்பு அப்படியில்லை. நாங்களெல்லாம் முள் படைகள்மீது நடிக்க வேண்டியிருந்

*இக் கட்டுரையின் படங்களை வேறு இடத்தில் காண்க.

தது. நாங்கள் முதலில் வேலை செய்தது ஒரு அறையில். இந்த அறையில் அந்த யந்திரங்கள், நடிகர்கள், ஒலிப்பதிவு செய்வோர், டைரக்டர் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. வெளியிலிருந்து சப்தங்கள் உள்ளே புகாத வண்ணம் அறையின் சந்து பொந்துகளெல்லாம் அடைக்கப்பட்டன. இதனால் காற்று வருவது துர்லபமாகி விட்டது. ஒரே புழுக்கம். நான் பேசி முடித்ததும், கதாநாயகன் பதிலளிக்க ஆரம்பித்தான். அப்போது குரலை மாற்ற ஒலிப்பதிவு செய்பவர் பட்டபாடு ஆண்டவனுக்கே வெளிச்சம். அந்தப் படம் என்ன வாயிற்றென்பதே தெரியாது. கதம்ப நாடகமாக அந்தப் படத்தைக் கொண்டுவர வேண்டுமென்பது தான் டாக்டர். டி. பாரஸ்டின் எண்ணம். 10 சுருளைப் படத்திற்கு நடிப்பதைவிட அதிக கஷ்டத்துடன் நாங்கள் அதில் வேலை செய்தோம். 1928-ல் பேசும்பட வினோதத்தில் ஹாலிவுட் 'தலைகீழாக' குதித்துக் கொண்டிருந்தபோது, நான் முதலில் பேசும் படத்தில் நடித்தவள் என்ற பெருமை எனக்கு ஏற்பட்டது''

1928 வருஷத்திய பேசும் படம்! அதை யார் மறக்க முடியும்? ஒரு படக் காட்சிக் கம்பெனியைக் காப்பாற்றிய ஒரு நாயுடன் கதை உண்மையில் ஆரம்பமாகிறது.

மஹா யுத்தத்தின் போது ஜெர்மன் ராணுவப் பிராந்தியத்தில் ரின் டின் டின் என்ற நாய் பிடிக்கப்பட்டது. அதனது எஜமான் அதை படக்காட்சித் தொழிலுக்கு பழக்கினான். பின்னர் அது வார்னர் சகோதரர்கள் படங்களில் ஒரு 'நக்ஷத்திரமாகி' விட்டது. ஜாக், ஸாம், ஆல்பர்ட், ஹாரி ஆகிய 4 வார்னர் சகோதரர்களும் மவுனப் படங்களை குவித்து வந்தனர். ரின் டின் டின் அவர்களிடம் வந்தபோது அவர்கள் கம்பெனி சாதாரணமாகத் தான் இருந்தது. ஆனால் பின்னர் அந்த நாய் அவர்களுக்கு பணத்தைக் கொண்டுவந்து குவித்து விட்டது. ரின் டின் டின் மட்டும் குலைக்காதிருந்தால் டாக்கீகளே இன்று இல்லாமற் போயிருக்கும்.

வெஸ்டர்ன் எலக்டிரிக் கம்பெனியார் ஒரு பேசும் பட யந்திரத்தை வைத்திருந்தார்கள். படமும் கிராமபோன் பிளேட்டும் இணைக்கப் பட்டது இது. இதனால் படத்தொழிலிலுள்ள முதலாளிகள் மனதைக் கவரலாமென்பது அவர்கள் எண்ணம். ஆனால் டாக்கீகள் ஒரு தோல்வி:— இது தான் பட முதலாளிகளிடமிருந்து கிடைத்த பதில். அப்போது சாம் வார்னர் இதைப் பார்த்து, தமது சகோதரரான ஹாரியிடம் இதை கவனிக்கும்படி சொன்னார்.

பெரிய வாத்தியக் கருவிகள் கோஷ்டியினரை அமர்த்த முடியாத சிறிய சினிமா தியேட்டர்களுக்கு, கீத ஒலியுடன் கூடிய படங்கள் இருந்தால் அது ஒரு பெரிய வரமாக யிருக்குமென்று நினைத்தார் ஹாரி.

ஆனால் வார்னர் சகோதரர்களின் இந்த முயற்சியும் மண்ணாகி விட்டது.

பகல் இரவு என்பது இன்றி அவர்கள் பேசும் படங்களைப் பற்றி யோசித்தார்கள். முடிவாக அவர்கள் திட்டங்கள் போட்டார்கள். இவைகளை ரகசியமாகவே வைத்துக் கொள்வது என்று முடிவு செய்தனர். ஆதலின் அவர்கள் நியூ யார்க்கில் தாங்கள் திட்டமிட்டபடி பேசும் படங்களைத் தயாரிக்க முயன்றனர். ஆனால் தங்களுக்கென சொந்த தியேட்டர் இல்லாததால் அவர்கள் ப்ரூக்லினிலுள்ள பழைய விடகிராப் ஸ்டூடியோவை வாங்கினார்கள். அவர்கள் புதிய தயாரிப்புகளுக்கும் 'விடபோன்'' என்ற பெயர் அளிக்கப்பட்டது.

முதலில் அவர்கள் தயாரித்த பேசும் படம் 'டான் ஜுவான்' என்பது. முதல் முதலில் படம் மௌனப் படமாகவே தயாரிக்கப்பட்டது. பின்னர் ஒலி சுருள் அத்துடன் இணைக்கப்பட்டது. இந்தப் படத்தில் சம்பாஷணை ஒன்றும் கிடையாது. ஒலிகள் இருந்தன. 16 அங்குலமுள்ள ஒரு பக்கமுள்ள தட்டுகள் மீதே பதிவு நடந்தது. ஒரு சுருளைக்கு ஒரு 'தட்டு' விகிதம் போடப்பட்டது. இப்படம் 1926வது வருஷம், ஆகஸ்டு மாதம் 6ம் வார்னர் தியேட்டரில் காண்பிக்கப்பட்டது. இதில் வெற்றி யேற்படவே அவர்கள் 10 நிமிஷங்களில் பூர்த்திபெறக்கூடிய துக்கடா நாடகங்களை படமாக எடுத்தனர். ஆனால் பழைய விடகிராப் யந்திரம் போதுமானதாக யில்லை யாதலின் நியூ யார்க்கின் ஒரு ஆபரா தியேட்டருக்கு அவர்கள்போய்விட்டனர். இங்கும் வசதிக் குறைவு ஏற்படவே, அவர்கள் ஹாலிவுட்டுக்குத் தங்கள் கடைகளைக் கட்டினர்.

பின்னர் உலகத்தின் முதல் ஒலி எதிர்ப்பு ஸ்டூடியோவில் வார்னர் சகோதர்கள் ஒரு கை பார்த்து விட முடிவு செய்துவிட்டார்கள். படம் பூராவும் மௌனப் படமாகவே தயாரிப்பது, ஆனால் ஒன்றிரண்டு பாட்டுகளை மட்டும் ஒரு பிரபல நடிகன் மூலமாக பாடவைப்பது. முதலில் ஜியார்ஜ் ஜெஸ்ஸல் தான் பிரதம நடிகராக தேர்ந்தெடுக்கப் பட்டார், ஆனால் அவர் தான் மவுனப் படங்களுக்கு மட்டுமே

(தொடர்ச்சி 25-ம் பார்க்க)

லூ-என் பெரிடித் என்னும் லண்டன் நாட்டியக்காரி. இவள் லயம் மிசவும் மனோரம்மியமானது பாவங்களைச் சித்தரிப்பதில் இவர் கியாதிவாய்ந்தவள்.

டாடியானு ரியா பௌவின்ஸ்கா என்னும் பிரபல ருஷ்ய நாட்டியக்காரி. இவள் உடல் அமைப்பும், காலடிகளின் சௌந்தர்யமும், அவள் அசைவின் லடமும் ரஸிகர்களுக்கு விருந்தே யாகும்.





கடினக் கூத்தில் வல்லடினு கிரேஸ் என்ற பிரபல ஜர்மன் நாட்டியக்காரி. இவர் உடல் கட்டும், முகத்தின் ஒளியும் நம்மவர்க் கேது?



டோரிஸ் நைல்ஸ் என்றழைக்கப்படும் ஸெர்ஜி லெய்லி—ஒரு பிரபல பிரிஞ்சு நாட்டியக்காரி.
இவள் உடை யலங்காரமும், உட லலங்காரமும் மனத்தை மயக்குகின்றன.
(மற்றும் சில நாட்டியத் தோற்றங்களை 43, 44-ம் பக்கங்களில் காண்க.)

(20-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகவும், பேசும் படத்திற்கல்லவென்றும், அப்படி பேசும் படத்திலும் நடிக்கவேண்டுமானல் தனக்கு அதிக பணம்கொடுக்க வேண்டுமென்றும் ‘தகராறு’ செய்யவே, ஆல் ஜால்ஸன் இந்தப் படத்தில் நடிப்பதற்கு அமர்த்தப் பட்டார்.

இந்தப் படத்திற்கு "ஜாஸ் விங்கர்" என்று பெயர் சூட்டப் பட்டது. இந்தப் படம் தயாரிக்கப் படுகையில், தனது தாயைப் பார்த்து அவன் பாடுவது போல் ஒரு கட்டம்! தன் பாட்டை கவனம் பன்ன ஆரம்பித்தான் ஆல் ஜால்ஸன்! ஆனல் மைக்ரோபோன் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது என்பது அவனுக்குத் தெரியாது. தமாஷாக தத்தியிட்டு நடந்து கொண்டு அவன் "சொல் அம்மா, கொஞ்சம் கேள் இதை" என்று பாட்டைப் பாடினன், அதே கணம் அந்தப் பாட்டு சுருளையில் பதிவாகி விட்டது.

அர்த்தமில்லாத அடிதான் அது! ஆனல் அது பதிவாயிருந்த போக்கைக் கண்டு அப்படியே விட்டு விட நிச்சயித்தனர்.

1927-வது வருஷம், அக்டோபர் 6உ, ஜாஸ் சிங்கர் படம் காட்டப்பட்ட போது அந்த5வார்த்தைகளை ஸ்பஷ்டமாகக் கேட்ட பொது ஜனங்கள் ஒரே ஆரவாரம் செய்தனர். கரகோஷம் சொல்ல முடியாது. படங்களில் சம்பாஷணைகள் வேண்டுமென்று அவர்கள் கேட்டனர். அன்றிரவு ஹாலிவுட் முழுவதும் ஒரே ‘கும்மாளம்’ தான்.

எற்கனவே பிரிட்டனும் பேசும் படத் துறையில் வேலை செய்ய ஆரம்பித்து விட்டிருந்தது. ஆர்த்தர் செஸ்னேயை பிரதம நடிகனுகக் கொண்டு ‘ஏ வெட் நைட்’ என்று பிரிட்டிஷாரால் ஒரு பேசும் படம் தயாரிக்சப் பட்டது. ஆனல் அது காட்டப்பட்டதா என்பது சந்தேகம்.

அதன் மீது பூராவும் பேசும் படமொன்றை தயாரிப்பதில் வார்னர்கள் மும்முரமாக ஈடு பட்டனர். முதலில் "நியூ யார்க்கின் தீபங்கள்" என்னும் படமே பூராவும் பேசும் படம். லண்டனில் இரண்டாவதாக "பயங்கரன்" என்ற பூரா பேசும் படம் காட்டப் பட்டபோது லண்டன் வாசிகள் திகைத்துப் போய் விட்டனர், அதிலிருந்து பூரா பேசும் படங்கள் வளர்ச்சி யடைந்தன.

முதலில் வந்த பூரா பிரிட்டிஷ் பேசும் படம் ‘பிளாக் மெயில்’ என்பது. ஆனி ஒண்ட்ரோ என்பவளே அதில் பிரதம நடிகை. இவளுக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது. ஆனல் அவளுக்குப் பதிலாக மற்றொரு நடி பேசினள், அவள் தான் ஜான் பாரி.

சங்கீதமும் பேசும் படத்திற்கு ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்து விட்டது.

இன்று பேசும் படங்களுக்குப் பஞ்சமா?. அதிலும் தமிழ் நாட்டு முதலாளிகள் பேசும் படவேட்டையிலல்லவோ இறங்கி யிருக்கிறர்கள்?.

"சந்திரோதயம்"

மாதமிருமுறை வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை

சந்தா விகிதம்

உள் நாடு

	ரூ.	அ.	ப.
வருட சந்தா	3	0	0
ஆறுமாத ,,	1	10	0
தனிப் பிரதி	0	2	0
இலங்கையில் தனிப்பிரதி	0	2	6

வெளி நாடு

வருட சந்தா	5	0	0
ஆறுமாத ,,	2	12	0
தனிப்பிரதி	0	4	0

மாதிரிப்பிரதி வேண்டுவோர் 0-2-6 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

மானேஜர்,

"சந்திரோதயம்"

வண்ணாரப்பேட்டை,

சென்னை.

*'டாக்கி'க் கதையின் படங்கள்

1

2

1. ஹாலிவுட் முதல் பேசும் பட 'ஈகூத்திரம்' ஆல் ஜால்ஸன் 2. டாக்டர் ஈஜின் லாஸ்ட்- இன்றைய தோற்றம். 3. ஜாஸ் டாடசன் வேடத்தில் ஆல் ஜால்ஸன். 4. முதல் பேசும் படத்திற்கு வழி காட்டியான ஈஜின் லாஸ்ட், ஸ்ரீமதி. பெலாமியை ஒரு பாடும் கட்டத்தில் டைரக்ட்செய்கிறார். அவரது மகனான எமிலி லாஸ்ட் காமிராக்காரர்.

3



4

* இதைப் பற்றிய கட்டுரையை 20-ம் பக்கம் பார்க்க.

சார்லஸ் லாப்டன்

[என். விஜயகுமார்.]



* * * * * 1



2

இங்கிலாந்தில், ஸ்காரப்ரோவில் (Scarborough) இன்றைக்குப் பல வருஷங்களுக்கு முன்பு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதன் முகம் அழகாயில்லை; அவலக்ஷணமாக யிருந்தது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அந்தக் குழந்தை பள்ளிக்கூடத்துக்குப் போகும் ஒரு பையனாகவு மாகி விட்டான்.

பள்ளிக்கூடத்திலோ அந்தப் பையனின் அவலக்ஷணமான முகத்தைக் கண்டு மற்றப் பையன்கள் வெறுப்படைந்தனர். 'டேய் அவலக்ஷணம்' என்று அவர்கள் மிருகத்தனமாகக் கத்தினார்கள். அந்தப் பையனை கேலி செய்வதுதான் அவர்களுக்குப் பொழுது போக்கு. எங்குபோனாலும் அவர்கள் அவனை நையாண்டி செய்யாமல் விடுவதில்லை.

5

படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் அந்தப் பையனை, இன்னும், சில "வால்கள்" 'பரபர'வென்று இழுத்து அவஸ்தைப் படுத்துவார்கள். திடீரென்று அவனை நிர்வாணமாக்கி அவன் உடம்பில் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, அவனது அவலக்ஷணத்தை அதிகமாக்கி ஆனந்திப்பார்கள் இன்னும் சில 'கலகத்தலைவர்கள்'. அவனைத் துன்புறுத்துதலில் மற்ற பையன்கள் இன்பம் கண்டனர்.

ஆக, பிறர் நகைப்பிலே, பிறர் வெறுப்பிலே, பிறர் இழைத்த துன்பத்திலே வளர்ந்த அந்தப் பையன்தான் உலகம் புகழும் மகத்தான நடிகனான சார்லஸ் லாப்டன். (Charios Laughton.)

* * *

கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும் பிறர் செய்யும் இன்னல்களுக்கும் சார்லஸ் லாப்டன் அஞ்சுவதில்லை.

'நான் மேலுக்கு அவலக்ஷணமாக இருக்கிறேன்; ஆனால் அவர்கள் உள்ளத்தின் அவலக்ஷணம் அதைவிட மோசமாயிருக்கிறதே" என்று சில சமயங்களில் லாப்டன் கூறுவார்.

இளமையிலேயே அவர் மனிதனுக்கு மனிதன் தீங்கிழைப்பது சர்வ சாதாரண விஷயம் என்பதை மற்றப் பையன்கள் மூலம்தெரிந்து கொண்டு விட்டார்.

3

4

"உன்னைப் போலில்லாத ஒருவரை உதைத்துத் தள்ளுவது உலகத்தின் இயற்கை" என்று இன்று சார்லஸ் லாப்டன் சொல்கிறார்.

இளமையில் அடிக்கடி அநுபவித்த அந்தக் கொடுமைகளால் வாழ்க்கையின் பிந்தைய நாட்களில் அவர் இருதயம் ஒரு பெரிய மாறுதலை அடைந்து விட்டது. லக்ஷணமல்லாத எல்லாவற்றையும் அவர் சொல்ல முடியாத பகைமையுடன் வெறுத்தார். அந்த வெறுப்பை அவர் பலவிதங்களிலும் காட்ட ஆரம்பித்தார்.

"எனது குழந்தைப் பருவம் மஹா பயங்கரமானது" என்கிறார் லாப்டன். அது வாஸ்தவம்.

இளமையில் அவர் தன்னந் தனியாக ஒதுக்கப்பட்டார். மற்றப் பையன்கள் அவரை சட்டை செய்வதில்லை. தான் அவலக்ஷணம் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் அவர் உள்ளமோ மிகவும் மேன்மையானது. தனது குடும்பத்தில் தவிர, அவர் வெளியில் ஆதரவு கண்ட தில்லை.

இன்பமற்ற குழந்தைப் பருவமே பிற்காலத்தில் கடுமையான குற்றவாளிக் கூட்டங்களை சிருஷ்டிக்கிறது என்று சமுதாய ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கின்றனர். நண்பர்களிடம் கொள்ளும் பகைமையும் வெறுப்பும் நாளடைவில் சமூகம் பூராவிலும் பரவு மென்பதும் உண்மைதான். ஆனல் சார்லஸ் லாப்டன் இதற்கெல்லாம் விதி விலக்கு. பகுத்தறியும் சக்தி லாப்டனுக்கு இளமையிலேயே இருந்தது. கொடுமைச் செயல்களுக்கும், செய்பவர்களுக்கும் இடையிலுள்ள உண்மையை அவர் உணர்ந்தார். அவ்வளவு துன்புறுத்தப்பட்ட போதிலும் கூட, அவர் மனித வர்க்கத்தை துளிகூட வெறுத்ததில்லை. அவர் எதையாவது வெறுத்தாரென்றால், மிருகத்தனத்தையும், அவலக்ஷணத்தையும் தான். அவர் அவலக்ஷணமா யிருந்தாலும் அவர் வாழ்க்கை லக்ஷணமானது. அவர் அழகி பக்தர். இயற்கையிலும், இலக்கியத்திலும், கலையிலும், சங்கீதத்திலும் அவர் அழகு வாய்ந்த அற்புதமான ஆலயங்களை சிருஷ்டித்தார். சகோதர மனிதர்கள் ஒரு விஷயத்தில் பூரணத்துவத்தை அணுகும்போதெல்லாம் அவர் கொள்ளும் ஆனந்தம் மட்டற்றது.

அவர் அறிவினலேயே உலகத்தின் கொடுமைகளை எதிர்த்து நின்றார். அவர் நன்கு படித்தவர். மிகவும் தீக்ஷண்ய புத்தி வாய்ந்தவர். அவர் பள்ளிக் கூடத்தில் இருந்த போதே அவர் வாழ்க்கையின் மாறுதல் பிரசன்னமாகி விட்டது. அவர் பள்ளியில் நடை பெற்ற ஒரு நாடகத்தில் கலந்து கொண்டார்.

அப்போது அவர் லங்கஷையரில் ஸ்டோனிஹாஸ்ட் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்தார். வயது பதினறு. நாடகத்தில் ஒரு ஹோட்டல் வைத்திருப்பவன் வேஷம் லாப்டனுக்குக் கொடுக்கப் பட்டது. அவரது தகப்பனரும் ஹோட்டல் காரராதலின் சார்லஸ் இதில் வெற்றியுடன் நடிக்க முடிந்தது. இதுவே அவரது பிற்கால வாழ்க்கையை நிச்சயப் படுத்தி விட்டது.

இந்த சமயம் மஹாயுத்தம் ஆரம்ப மாகியது. பிரிட்டிஷ் கப்பற் படையில் லாப்டன் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் படுவார் என்று அவரது பெற்றோர்கள் கருதினர். தடித்த அவலக்ஷணமாயுள்ள அந்தப் பையன் (சார்லஸ் லாப்டன்) பிரிட்டிஷ் கப்பற்படை அதிகாரிகள் போர்டின் முன்பு ஆஜர் படுத்தப் பட்டான். இன்னும் சிலரும் அவனுக்கு முன்பே அங்கு வந்திருந்தார்கள்.

"ஜான் பால் ஜோன்ஸ் என்பது யார்?" என்ற கேள்வியை போர்டார் கேட்டனர்.

"தனது காலை இழப்பதற்கு முந்தி லார்ட் நெல்சனின் பெயர் அது தான்" என்று 'டக்'கென்று பதிலளித்தான் சார்லஸ் லாப்டன்.

போர்டார் திகைத்துப் போய்விட்டனர். இந்த அவலக்ஷணப் பையனு பதில் சொல்கிறன்? என்பதே அவர்கள் திகைப்புக்குக் காரணம்.

'அழகான ஆல்பியன் கடற் கரையில் இந்த மாதிரி பையன் இருப்பதும் உண்மை தானு?' என்று பதட்டமாகவும் கேட்டான் ஒரு அதிகாரி. லாப்டன் முகத்தில் துயரம் படர்ந்தது.

"வாஸ்தவம்தான்" என்ற பதில் லாப்டனிட மிருந்தே கிடைத்தது.

சார்லஸ் லாப்டன் தள்ளப் பட்டார்.

இந்த முடிவை முன்னதாகவே லாப்டனே நிச்சயித்து விட்டிருந்ததால், கவலை யின்றி வீடு வந்து சேர்ந்தார்.

பின்னர் அவர் காலாட்படையில் சேர்ந்தார். அப்போது அவனுக்கு வயது 18 ஆகிவிட்டது. யுத்தத்தின் மூலமாக மனிதனின் மிருகத்தனத்தை இன்னும் அதிகமாக உணர்ந்து கொண்டார். ஒரு மனிதன் மற்றொரு மனிதன் உடலை தோட்டாக்களால் பஞ்சாகச் செய்வதைப் பார்த்தபோது லாப்டன் கொண்ட நடுக்கம் சொல்லும் தரமன்று. விஷவாயுப் பிரயோகம் செய்யப் பட்டபோது அவர் அதற்கு இலக்கானர். தெய்வாதீனமாக உயிர் தப்பினர். யுத்தமும் முடிந்து விட்டது. அதிலிருந்து அவர் காம் நடிப்பில் துப்பாக்கியைத் தொட்டதுண்டே ஒழிய, மற்றும்

6

எக் காலத்திலும் தொட்ட தில்லை. வேட்டையாடுதலையும், உயிர் வதை செய்வதையும் அவர் பொழுது போக்கு வீரத் தனமுள்ள விளையாட்டு என்று கருதவ தில்லை.

வீடு திரும்பியதும் அவர் தமது பெற்றோரைத் திருப்தி படுத்த வேண்டி, லண்டனிலுள்ள கிளேரிட்ஜ்ஸ் என்னும் கீர்த்தி வாய்ந்த ஹோட்டலில் ஒரு தொழிலாளரானர். பெரிய பிரபுக்களுக்கெல்லாம் அந்த ஹோட்டல் வாசஸ்ஸ்தான மாயிருந்த போதிலும், அங்கு வந்து தங்கும் நடிகர்களிடத்திலே லாட்டனுக்கு ஆசை அதிகமாகி வந்தது. சமயம் சேர்ந்தபோதெல்லாம் அவர் அவர்களுடன் உறவாடி அளவளாவுவ துண்டு.

*** 7

பின்னர் முடிவாக தனது தகப்பனருக்கு உதவியாக இருக்க எண்ணங் கொண்டு லாப்டன் ஸ்கார் பரோவிற்குத் திரும்பி விட்டார்.

சில மாதங்களுக்கப்புறமே அவர் மனதில் ஒருதீர்மானம் திடீரென்று தோன்றியது.

8

அவரது அண்ணன் அந்த சமயம் உழவு வேலைசெய்து கொண்டிருந்தார். அது அவருக்குக் கசந்து விட்டது. தம்பியிடம் வந்து தன் குறைகளை முறையிட்டுக் கொண்டார்.

'சரி, நீ இங்கிருந்துவிடு' என்றார் லாட்டன்.

"ஆனல், நீ என்ன செய்ய உத்தேசம்" என்றார் அண்ணன்.

"நான் ஒரு நாடகக்காரனகப் போகிறேன்" என்ற பதில் லாட்டனிட மிருந்து வந்தது.

பெற்றோர்களும் இந்த முடிவைத் தடை செய்யவில்லை.

இருபதாவதுவயதின் ஆரம்பத்தில் சார்லஸ்லாப்டன் நடிப்புக் கலையைப் போதிக்கும் பிரபல பள்ளிக் கூடமான ராயல் அகாடமி ஆப் டிராமாடிக் ஆர்ட்டில் சேர்ந்தார்.

ஒரு வருஷ பயிற்சிக்குப் பின்னர், அவர் நடிப்பின் உன்னதத்தை மெச்சி அவருக்கு ஒரு மெடலும் பரிசளிக்கப் பட்டது. பின்னர் ஆசிரியர்கள் ஆக்ஷேபனைகளையும் பொருட் படுத்தாது நாடகத் தொழிலாளியாக சார்லஸ் கிளம்பி விட்டார்.

லண்டனிலுள்ள பல தியேட்டர்களில் அவர் தோன்றினார். அப்போது அவர் வாரத்திற்கு3 பவுன்களுக்கு மேல் சம்பளம் கண்ட தில்லை.

ஆர்னால்ட் பென்னட் எழுதிய மிஸ்டர். பிரோஹாக் என்ற நாவல் நாடகமாக நடிக்கப் பட்ட போது, அவர் அதில் கதா நாயகனாக காட்சி யளித்தார். பின் அவர் 'பிக்கடலி' என்ற படத்தில் முதல் முதலாக நடித்தார்.

இது முடிந்ததும் அவர் அமெரிக்காவிற்கு வந்து சேர்ந்தார். அங்கு 'சம்பள வித்தியாசம்' என்ற படத்தில் நடித்தார். ஒரு பெரிய நடிகன் அவர்களிடையில் இருப்பதை அப்போதே கண்டு கொண்டனர் நியூயார்க் நகர மக்கள். அப்போது தான் அலெக்ஸாண்டர் கோர்டா என்னும் ஹங்கேரிய இளைஞர் (உலகத்தின் பெரிய டைரக்டர்களில் ஒருவர்) 8-வது ஹென்ரியின் வேடத்திற்கு ஒரு நபரைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்பது லாப்டனுக்குத் தெரிய வந்தது. அவர் லண்டன் திரும்பினார்.

பின்னர் 8-வது ஹென்ரியின் வேடத்திற்கு கோர்டாவால் லாப்டன் தேர்ந்தெடுக்கப் பட்டார் என்ற செய்தி கேட்டதும் லண்டன் முழுவதும் சிரித்தது. பத்திரிகைகளிலுள்ள கூலி விமர்சகர்கள் பேனாக்கள் இதை விஷயமாகக் கொண்டு ஒரே குரலாக ஓலமிட்டன. ஆனால் கோர்டா நகைத்துக் கொண்டிருந்தார்.

கதையோ பெரிது. வேண்டும் பணமும் பெரிது. பெருமுயற்சியுடன் கோர்டா படத்தைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டார். லாப்டனுக்குப் பதிலாக வேறு பலர் பெயர்கள் சிபார்சு செய்யப் பட்டன. அவைகளைக் காதில் போட்டுக்கொள்ள மறுத்து விட்டார் கோர்டா.

''அதிசய மனிதன்'' என்ற படம் லான்சானி, தாமஸ் மெய்கன், பெட்டி காம்ஸன் ஆகிய நடிகர்களையும், ஜயார்ஜ் லோன் டக் ஆகிய டைரக்டரையும் பிரசித்தி வாய்ந்தவர்களாக்கியது போலவே, கோர்டாவின் படமான 8-வது ஹென்ரியும் சார்லஸ் லாப்டன், மெர்ல் ஓபரான், வெண்டிபாரி, பின்னி பார்னஸ், ராபர்ட் டோனட் இவர்களையும் பிரசித்தி பெற்றவர்களாக்கியது. அப்போது அலெக்ஸாண்டர் கோர்டாவின் பெருமையை ஹாலிவுட் நிர்வாகிகள் உணர்ந்து அவரைப் பாராட்டினார்கள்.

பின்னர் அவர், 'லெஸ் மிஸராபிள்ஸ்' ரக்கிள்ஸ் ஆப் தி ரெட் காப், பவுண்டி கப்பலில், கலகம், ''வெள்ளை மாது'' டவுன் ரிவர் 'எனக்த ஒரு பத்து லக்ஷம் இருந்திருந்தால் 'சிலுவையின் குறி' விம் போல்ஸ் வீதியின் பாராட்டுகள்'' ஆத்மா இழந்தவர்கள் தீவு' 'சிரீனோ' ஆகிய படங்களில் நடித்தார்.

* * *

லாப்டன் ஒரு பாத்திரத்தை மேற்கொண்டு நடிக்கும்போது தன்னை மறந்து விடுவார். அதனாலேயே அவரது நடிப்பு இணைபற்று விளங்குகிறது.

'லெஸ் மிஸராபிள்ஸ்'! மனிதவர்க்கத்தின் முட்டாள்தனத்தின் வெண்கலச் சின்னம்தான் ஜாவர்ட்'' என்கிறார் லாப்டன். ''நான் அவனை ஒரு வெண்கல மனிதனாகவே ஆக்க முபன்றேன். எனது வேஷத்தில் கூட, வெண்கலத் தோற்றத்தை உண்டாக்கிக் கொண்டேன். குறிப்பாக, எனது கண்களையும், நெற்றியையும் அப்படி மாற்றினேன், தெரிகிறதா?''—

லாப்டன் அடிக்கடி, 'தெரிகிறதா?' 'தெரிபுமா?' என்ற வாக்கியங்களை தமது சம்பாஷணைகளில் கொண்டுவந்து விடுவார். அவரை பலர் தவறாக உணர்ந்து வந்ததன் பலனே அவரை அம்மாதிரி சொல்ல வைக்கிறது.

''மனிதனால் செய்யப்பட்ட சட்டங்களின் இருட்டில் அடியோடு தவழ்ந்த அந்த போலீஸ்காரனான ஜாவர்ட்டுக்கு இரக்கம் தெரியாது, சமரஸம் தெரியாது. உண்மையில் அவன் உயிரற்ற வெண்கலச் சிலையாகவே இருந்து வந்தான். ஆனால் இரக்கம் அவன் இருதயத்தில் தோன்றியபோது, அது அவனை அடியோடு கொன்று விட்டது. அது உருகிப் போயிற்று. தற்கொலையில் அவன் வாழ்வு முடிந்து விட்டது. அவனுக்காக அனுதாபப் படாதவர்கள் யாரிருக்க முடியும்;'' என்று லாப்டன் கூறுகிறார். இத்தகைய சிந்தனைகளைக் கொண்ட லாப்டன் ஜாவர்ட் வேடத்தைத் தாங்கி நடித்தபோது அவருக்கு வெற்றி கிடைத்ததில் வியப்பென்ன விருக்கிறது?

8-வது ஹென்ரி படத்தைப் பற்றி லாப்டன் அறிஞர்கள் நிறைந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில், ''ஹென்ரி கொடும் பாவியை விட ஒரு எளிய ஆத்மா என்றே நான் சொல்லுகிறேன். இளமையில் தன்னைச் சுற்றியிருந்த பெண்களை அவன் இஷ்டம் போல் ஆட்டினான். முதுமையில் அவனைச் சுற்றியிருந்த பெண்கள் அவனை தங்கள் இஷ்டம் போல் நடத்தினார்கள். மனத்தைப் போன போக்கில் விட்ட

தனுல் அழிந்த ஒரு ஆத்மாவே ஹென்ரி'' என்று கூறினர்.

''இழந்த ஆத்மாக்களின் தீவு'' என்ற படத்தில் லாப்டன் டாக்டர் மோரீயூவாக நடித்தார். அதைப் பற்றி அவர் பின் வருமாறு சொல்லுகிருர்:-

''டாக்டர் மோரீயூவுக்கு கடவுளாக மாறிவிட வேண்டும் என்று நினைக்கும் பள்ளிக் கூடத்துப் பையனின் பேராசைதான இருந்தது. தாங்கள் எஞ்ஜினியர்களாகிவிட வேண்டும், இன்ஸ்பெக்டர்களாகவும், நீதிபதிகளாகவும், மாந்தீகர்களாகவும்

* * * 9

10

ஆகிவிடவேண்டுமென்று பையன்கள் ஆசைப் படுவது உங்களுக்குத் தெரியாதா?........பின்னர் பெரியவளுக ஆகி பள்ளிக்கூடத்துக்கு வந்ததும் அவர்கள் பேராசைகளில் மாறுதல் தோன்றி கடவுளாக மாற வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டு, அவர்கள் தங்கள் மனதில் கனவு உலகங்களை சிருஷ்டித்துக்கொள்வதில்லையா? அது மாதிரிப் பையன் தான் டாக்டர் மோரீயூ. அவன் மிருகங்களை மனிதர்களாக்கிஞன்; மனிதர்களை மிருகங்களாக்கிஞன்''.

டேவிட் காப்பர்பீல்ட் படத்தில் லாப்டனுக்கு மிக்காபர் வேடம் கொடுக்கப் பட்டபோது அதை ஏற்க மறுத்து விட்டர்.



11

''டிக்கன்ஸிடம் எனக்கு பிடித்தம் கிடையாது. முட்டாள்களுக்காக அவன் மோக்ஷ உலகத்தைச் சிருஷ்டித்த ஒரு 'குள்ள நரி' என்பதே என் அபிப்பிராயம். அவனது மிக்காபர் சிருஷ்டியை நான் மனப்பூர்வமாக வெறுக்கிறேன். ஆதலின் நான் மிக்காபராக நடிக்க முடியாது'' என்று காரணத்தையும் கூறிவிட்டார் லாப்டன்.

லாட்டன், மிக்காபர் வேஷத்திற்காக முதலில் தமது மயிரைக்கூட குட்டையாக கத்தரித்துக் கொண்டார். ஆனல் மிக்காபரைப் பற்றிப் படித்து ஆராய்ச்சிசெய்த போது, அந்த மாதிரி மனிதனை மிக்காபரை உன்னதப் படுத்துவதென்பது லாப்டனுக்கு பிடித்த

மில்லாமல் போய் விட்டது. ஆதலின் அதைத் தள்ளி விட்டார்.

ஒரு விஷயம்! அவரது காதல் மனைவியாகிய எல்சா லன்செஸ்டரைக் குறிப்பிடா விட்டால் லாப்டன் வாழ்வு பூர்த்தி பெற்றதாகாது. இருவரும் மனமொத்த காதலர்கள். லண்டனிலுள்ள ஒரு தியேட்டரில் முதல் முதலாக ஏற்பட்ட அவர்கள் காதலுக்கு இது வரையில் முறிவு ஏற்பட்டதில்லை. இருவரும்

பரஸ்பரம் ஒருவரை ஒருவரை நன்கு அறிந்து கொண்டனர்.

அவர் அவளிடம் கொண்டிருக்கும் காதலுக்கு ஒரு உதாரணம்!.

1933-வது வருஷம். கிறிஸ்துமஸ் பண்டிகை ஆரம்பமாகிப் போகிறது. ஹாலிவுட்டிலிருந்து லாப்டன் லண்டனுக்குப் போக நிச்சயித்து விட்டார். ஆனால் ஹாலிவுட்டுக்கோ அவரை விட்டுவிட மனமில்லை. தனது மனைவி இங்கிலாந்திலிருப்பதாகவும் அவளிடம் தான் போய்த் தானாக வேண்டுமென்று கூறி விட்டார் லாப்டன்.

* 12

ஹாலிவுட்டின் பெரிய முதலாளி ஒருவர், "லாப்டன், இதுதான் காரணமென்றால், நீங்கள் லண்டனுக்கு போகவேண்டியதில்லை. தங்கள் மனைவியை இங்கு நாங்களே விரைவில் கொண்டுவந்து சேர்த்து விடுகிறோம்" என்றார்.

"அது சரி, ஆனால் இங்கு நடக்கும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கும், இங்கிலாந்து கிறிஸ்துமஸ் பண்டிக்கைக்கும் வித்தியாசமிருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா?" என்றார் லாப்டன்.

முடிவாக, அட்லாண்டிக் டெலிபோன் மூலமாக அவரது மனைவியின் முடிவைக் கேட்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவள் இணங்கி விட்டால், அவர் ஹாலிவுட்டிலேயே தங்கிவிடவேண்டும். என்பது, ஷரத்து. டெலிபோனில் பேசியபோது, ஸ்ரீமதி லாப்டன் "நீங்கள் அங்குதான் இருங்களேன். நான் சீக்கிரம் திரும்பிவிடுகிறேன்" என்று கூறி விட்டாள்.

இடி விழுந்தது போலாய்விட்டது அவருக்கு! "எல்சா, நீயாக இப்படிச் சொல்கிறாயா?............ அல்லது படத்தினால் கிடைக்கும் பணத்தையும், கீர்த்தியையும் நினைத்துக்கொண்டு இப்படிச் சொல்கிறாயா?" என்று படபடப்புடன் டெலிபோனில் கேட்டார் லாப்டன்.

இத்தருணத்தில் 'சான்ஸ்' போய்விடும் போலிருந்ததைக் கண்ட அந்த முதலாளி, அவர் தமது சட்டைப் பையினின்று ஒரு 1000 பவுன் நோட்டை எடுத்து, லாப்டனிடம் நீட்டி, போனஸ்! போனஸ்!" என்று பரபரப்புடன் சொன்னார். லாப்டனோ சக்கடவென்று நகைத்தார். 'ஓ' இதெல்லாம் எனக்கு வேண்டியதில்லை!......என்று அதை வாங்க மறுத்து விட்டார் லாப்டன். முதலாளி முகம் தொங்கிப் போய் விட்டது.

'சரி! வந்து விடுங்கள்' என்ற பதிலும் எல்சாவிடமிருந்து கிடைத்து விட்டது.

மறு நாளே அவர் இங்கிலாந்துக்குத் திரும்பி விட்டார்.

மேலும் ஹாலிவுட்டின் பணப் போக்கே அவருக்கு அதிசயத்தை அளிக்கிறது.

பாரமவுண்டில் அவர் முதலில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போது, ஸ்டுடியோவின் தலைமை அதிகாரியான ஸ்ரீ. அடால்ப் ஜுசோரைப் பார்த்து, "எனது ஆயுட் காலத்திலேயே நான் இவ்வளவு பணத்தைப் பார்த்த தில்லை.........இது சரிதானென்று தாங்கள் நினைக்கிறீர்களா?" என்று திகைப்புடன் கேட்டார் லாப்டன்.

'ஆம். இது சரியான தொகைதான்' என்பதே பதில்.

லாப்டனுக்கு அப்போதும் புரிய வில்லை. "சார்! நீங்கள் என் எனக்கு இவ்வளவு பணம் கொடுக்கிறீர்கள்' என்று மற்றொரு கேள்வியைப் போட்டார் சார்லஸ்,

ஜுசோருக்கே இப்போது குழப்பம் வந்துவிட்டது. "என் என்பதைப் பற்றி ஹாலிவுட் ஆச்சர்யப் படுவதில்லை. நடிப்புக்கு இப்போது ரொம்பவும் கிராக்கி. அது தான் காரணமாக இருக்க வேண்டும்' என்று தட்டுத் தடுமாறிய பதிலே ஜுசோரிடமிருந்து கிடைத்தது.

* * * * * * * * * * * * *:—சார்லஸ் லாப்டன் நடித்த படங்கள். 1. 'வெள்ளைமாதி'ல் இரக்கமற்ற தோட்டக்காரன் வேஷத்தில். 2. 'டவுன் ரிவரி'ல் காப்டன் கிராஸ்மேன் வேஷத்தில். 3. 8-வது ஹென்ரியின் இளமைப் பருவத்தில். 4. ஹென்ரியின் முதுமைப் பருவத்தில். 5. சார்லஸ் லாப்டனின் சுய உருவம். 6. 'விம்போல்வீதி பாராட்டு'களில் மௌலின் பாரட் வேஷத்தில்.7. 'லெஸ்மிஸராபிள்ஸி'ல் போலீஸ்காரன் ஜாவர்ட்டாக. 8. (கட்டத்திற்குள்) 'டாக்டர் மொரியு' வேஷத்தில் (கீழே) 'பவுண்டி கப்பலில் கலகம்' என்ற படத்தில் காப்டன் பிளையாக. 9. எனக்கு 10 லக்ஷம் இருந்திருந்தால், என்பதில், குன்றிப் போன குமாஸ்தா தோற்றம்10. 'சம்பள வித்தியாசத்தில்' வில்லியம் மார் பிளாக். 11. 'சிலுவையின் குறி'யில் பெட்டை நீரோவாக. 12. சார்லஸ் லாப்டனும் அவரது காதல் மனைவி எல்சா லன்செஸ்டரும்.

பேரழகியும், பெரிய சினிமா நடிகையுமான **மெர்ல் ஓ பிரான்**



உதய கன்னி

[பால பாரதி ச. து. சு. யோகி]

ஒளிகளுக் கெல்லாம் ஒளியாவாள்.
உதய கன்னி அழகோடு உதித்தாள்.
காட்சி மிகுந்த மின் கதிர்கள் எங்கும் பரவின.
மாசற்ற சூரியன் வரவு நோக்கி மறையும் இரவு
உதய கன்னியை உதிக்கச் செய்தாள்.

2

வெண்மையாகிய உதய கன்னி தனது ஒளி மிகுந்த
சூர்யனாகிய மகனோடு வந்தாள்.
கரிய இரவு அகன்று சென்றாள்.
இருளும் ஒளியும் குளிர்ச்சி பொருந்தியவையாய்,
மரணமற்றவையாய்.
மாறி மாறிப் பல வண்ணங்களாய்ப் பிரகாசிப்பாள்.

3

சகோதரிகளாகிய அவர்களது பவனிமார்க்கம் வான
வீதியேயாம்.
அது எல்லையற்றது.
அவர்கள் தேவர்களின் ஆணைப்படி பக்கம் பக்கமாய்ச்
செல்வர்.
முட்டிக் கொள்ளார்கள்
நல்ல உருவ முடையார்
மாறுபட்ட வடிவமுடையார்.
எனினும் அவர்கள் மனம் ஒத்தார்.

4

இனிய ஒலிகளை எழுப்பும் இவளை.
எமது கண்கள் காணும்.
பெருமையுற்ற சித்திர வடிவினள்.
உஷை, இருளைக் கலக்கி ஒளி கொணர்ந்தாள்.
உலகம் ஒளி வீசியது.
செல்வம் யாவும் நன்கு தெரிந்தன.
அவள் எல்லா உயிரையும் எழுப்பினாள்.

5

தனவதியாகிய உஷை
முடக்கித் தூங்கும் மானுடரைப் போகங் கொள்ளத்
தூண்டினாள்.
சிலரை த்யாகம் செய்ய ஏவினாள்
சிலரைச் செல்வம் கொணரப் போக்கினாள்.
காட்சியற்றவர்களுக்குக் காட்சி கொடுத்தாள்.
உயிர்களை உயிர்ப்பித்தாள்.

6

எல்லா உயிரையும் எழுப்பினாள்.

பொன் விளையும் போர்க்காகச் சிலரையும்
தீச்சுடர் வளர்த்தச் சிலரையும்
பொருளீட்டவும், இன்ன பலவற்றிற்காகவும்
யாவரையும் எழுப்பினுள்.

7

வானின் மகளாவாள்.
அவள் இளங்குமரி.
காந்தி வீசும் தன் ஆடையால் இருளைக் சடிந்தாள்.
எப்புவனத்திலும் எச்
செல்வத்திற்கும்நாயகி.
உதய கன்னி!
சீர்பெற்றசெல்வத்தோடு
ஈண்டு எழுவாளாக.

8

உதய தேவியே!
நீ சமித்துகளில் தீ
மூட்டினுய்.
சூரிய சோதியில் யாவற்
றையும் விளக்கினுய்.
யக்ஞத்தைத் தூண்டி
னுப்.
மூவிதச் செயலையும்
நடப்பித்தாய்.

9

உஷையே!
முன்புன்னைக் கண்டார்
பலர்.
அவர்கள் மடிந்தனர்.
நாங்கள் இன்றுன் சிறந்த
ஒளியைக் காண்கின்
றேம்.
நாளையும் பலர் இதைக்
காணத் தோன்றுவார்
கள்.

10

முன்னும் ஒளியுடன்
வந்தாள்.
இன்னும்ஒளி மிகுந்தாள்.
நாளையும் ஒளி விடுவாள்.

11

வானத்தில் எல்லாத்திசைகளிலும் ஒளி வீசினுள்.
தன்னுடைய தேஜஸால் கரிய இருளை மாற்றினுள்.
உயிர்கள் உணர்ச்சி பெறச்
சிவந்த குதிரைகள் சட்டிய தேரில் வந்தாள்.

12

எழு+!
ஜீவத்திறல் உடலிற் பாய்கின்றது.
இருள் ஒழிந்தது.
சூழும் ஜோதி சூழ்ந்தது.
சூர்ய வீதி யமைந்தது.
இவ்வொளி ஆயுள் வளர்க்கும் அன்னம்.
இதைப் பருக வந்தோம்

13

ஜீவச் செல்வம் ஈந்தாள்.
மாசற்றஉணர்ச்சிதந்தாள்
பேரொளி வீசினுள்.
முன்னதாய் வந்தாள்.

14

உஷைபால் தோத்திரம்
உரைப்போம்.
உனது ஒளியை எம் மீது
வீசுவாய்.
செல்வந் தருவாய்.
நல்ல சந்தானங்களை உற்
பத்தி செய்வாய்.

15

வீரரைச் சார்வாய்.
ஸ்துதி செய்கின்றேம்.
காற்றுக் கொணரும் சோ
மரசமுண்பாய்.

16

தேவர்களின் தாயே!
அதிதி தேவியின் முகமா
வாய்.
யக்ஞத்தின்கொடியாவாய்
மேன்மை தங்கியவளே
எமது மந்திரங்களில்
விளங்குவாய்.
யாவரினும் உயர்ந்தாய்.
எம்மை மனிதரில் உய
ர்த்துக.

17

யக்ஞத்தோடு தோத்திரம் செய்பவனுக் கருள்வாய்.
நீ தரும் செல்வம் மங்கலமுடையது.
அதைப் பூமியும், வானும், சிந்துவும், அதிதியும், மித்
ரனும், வருணனும் தாங்கிக் காப்பாராக.



இப்பொழுது தமிழ் நாட்டிலுள்ள ஒரே கவி, பால பாரதி ச. து. சுப்பிரமணிய யோகி. (காளிதாஸன்)

ரிக் 113 மண்ட 1 அனுவாகம் 16 சூக்தம் 8. Rish Kuthsa, உஷஸ்.

வடநாட்டு படங்களில் சம்பாஷணை

[ஸ்ரீமான். பண்டிட் இந்திரா]

கேள்வி 1: நமது படங்களில் சம்பாஷணைகள் எவ்வளவுக்குப் பயன் படுகின்றன?

பதில்:—மனித வர்க்கத்தின் உள்ளத்தை அவைகள் வெளிப்படுத்துகின்றன. அந்தரங்கங்களை அம்பலத்துக்குக் கொண்டு வருகின்றன. கொள்கைகளை விதைக்கின்றன. நன்னெறியைக் காண்பிக்கின்றன. சடையினரோடு நெருங்கிய உறவு வைத்துக்கொள்கின்றன.

பேசும் எல்லாவற்றையும் உலகம் விரும்பி அழைக்கிறது. மனித வாழ்க்கையில் புரட்சியை சிருஷ்டிக்க பேசும் படங்களுக்கு சாத்தியமாகிறது. எழுத்தாளனின் நாக்கு தான் சம்பாஷணை. அது நல்லதாக இருக்கட்டும், கெட்டதாக இருக்கட்டும், அதுவே ஒவ்வொரு படத்தின் உயிராகும்.

கேள்வி 2. நல்ல சம்பாஷணைகளெண்டதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீகள்?

பதில்:—மனித ஆத்மா, அதனது சுழற்சிகளுக்கு ஒலி கொடுத்து அவைகளை வெளிப்படுத்துவதுதான் சம்பாஷணை. வான முகட்டை நோக்கிப் பறக்கும் கற்பனையில் ஈடுபடும் மனித உள்ளத்தின் போக்கை உருப்படுத்துவதே பேச்சு. ஒரு மகத்தான மனது அழகு, முடிவற்றது; இவைகளுடன் கலந்தே இருக்கும்; ஆக இந்த மனதினின்று எழும் சொற்களில் இனிமையும் ஞானமும்; அழகும் இயற்கையாகவே ததும்பும். இந்த தினுசில் இருக்கும் சம்பாஷணைகளே உயர்தரமானவை. இவைகளே ஒரு சரியான பாஷை. பாஷையில் நல்ல நடையும் அலங்காரங்களும் இருப்பது மட்டும்போதாது. ஒவ்வொரு வரியிலும் காரணம் இருக்கவேண்டும், மனோ உணர்ச்சிகளை ஒவ்வொரு வார்த்தையும் மற்றவன் மூளைக்குப் புகுத்த வேண்டும்.

கேள்வி 3: பல்வேறு ஜாதி மக்களைக் கொண்ட 'இந்தியப் பேசும்பட உலகத்தில்' எது எல்லாராலும் அங்கீகரிக்கத்தக்க பாஷையாக இருக்கவேண்டும்?

பதில்:—எல்லாரும் அங்கீகரிக்கத்தக்க ஒரு பாஷையை எழுதவேண்டுமென்பது ஒரு எழுத்தாளனுக்கு முறையற்ற கட்டளை. இந்தியாவில் 100 மைல்களுக்கு ஒரு தரம், பாஷை மாறிக்கொண்டே போகிறது.

இந்தியாவில் பேசப் படும் பாஷைகளோ பல. உருது பொதுவாக ஒரு அழகான பாஷை. மனித இருதயத்தின் ஒவ்வொரு சலனத்தையும் இந்த பாஷையில் வெளிப்படுத்த முடியும். ஆனால் இதில் இரண்டு பிரிவுகளிருக்கின்றன ஒன்று உயர் தரம். மற்றொன்று சாதாரணம். அடுத்தபடி ஹிந்தியை எடுத்துக் கொண்டால், இது உருதுவைப்போல அவ்வளவு அலங்கார முடையதல்ல. ஹிந்திக்கு சமஸ்கிருதத்துடன் நெருங்கிய தொடர்பிருப்பதனால், அதில் எண்ணற்ற பதங்கள் இருக்கின்றன. இவைகள் சில மாகாணத்தார்களால் மட்டுமே உணரப்படும். ஆதலின் இந்த பாஷைகளையும் சமரஸப் படுத்தி மத்தியில் வீற்றிருக்கும் பாஷை ஹிந்துஸ்தானியே யாகும். இதுதான் பேசும் படங்களின் பாஷையாக இருக்க

பேராசிரியான பண்டிட் இந்திரா பம்பாயிலிருந்து வெளியாகும் 'பிலிம் இந்தியா' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையின் மூலம் வட நாட்டுப் படங்களின் சம்பாஷணைகள் சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். அங்காவது சம்பாஷணையைப்பற்றி ஏதாவது இப்படி சொல்வதற்கு இடமிருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில்பேசும் படங்களின் சம்பாஷணைகளைப் பற்றி சொல்வதென்றால் ஒன்றும் கிடையாது. நமது படங்களில் சம்பாஷணைகளேது? சம்பாஷணைக் கர்த்தர்கள் தாம் எது?.........

— ஆசிரியன்.

ஸ்ரீ பண்டிட் இந்திரா

வேண்டும். உருது, ஹிந்து, ஹிந்துஸ்தானி ஆகிய மூன்றும், இழைந்துவிளங்குவதினால் பாமரர்களுக்கும் விஷயம் புரியும், படித்தவர் களுக்கும் புரியும்.

ஹிந்துஸ்தானி தான் இந்தியாவின்தேசீய பாஷையா இருக்க வேண்டும்.

கேள்வி 4: இன்று நம்மிடையில் படக் காட்சிகளுக்கு கந்த சம்பாஷணைகள், பாட்டுகள் எழுதுவதில் யார் சிறந்தவர்கள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்:—தற்போதைய எழுத்தாளர்களில் பண்டிட் பேதாப் தலைசிறந்தவர். “தேவயானை” “ராதா ராம்” ஆகிய இந்த இரண்டு ரஞ்ஜித் படங்களில் உள்ள இவரது அற்புதமான சம்பாஷணைகள் இலக்கியத்தில் நிரந்தர மைல் கற்களாக விளங்கும்.

உணர்ச்சியுடன் எழுதி ஆத்மாவுக்கு கிளர்ச்சியை விளைவிக்கும் விதத்தில் இவர் எழுதிய ஒரு காலமும் இருந்தது. ஆனால் இப்போது இவருக்கு எழுத்து ‘சான்னித்தியம்’ போய்விட்டதோ, அல்லது அகந்தைதான் கண்மறைத்து விட்டதோ, தெரியவில்லை. இவரது பேனாஒளி மழுங்கி விட்டது.

கேதாரி சர்மா மற்றொரு எழுத்தாளர். தமது எழுத்துக்களில் போதுமான மனோஉணர்ச்சியை சித்தரிக்கிறார். ஆனால் பலமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்தவேண்டும் என்ற பேராவலில் இவர் பாஷையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பழக்கமான சொற்களை மறந்தே விடுகிறார்.

என்னைப்பற்றி நான் ஒன்றும் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. இது என்னிடமுள்ள தாழ்மையாகவுமிருக்கலாம்; அல்லது ஒரு மரியாதையாகவுமிருக்கலாம்.

மேற்படி யார்களைத் தவிர வேறு எந்த எழுத்தாளர்களையும் நல்ல எழுத்தாளர்கள் என்று என்னால் கூற முடியாது. படங்களுக்கு சம்பாஷணைகள் எழுதுவதென்பது அறிவற்ற கிறுக்கர்கள், அச்சுக்கோர்க்கத் தெரிந்தவர்கள் இவர்களது தொழிலல்ல. அறிவுடையோர்களுக்கே இது ஏகபோக உரிமை.

கேள்வி 5. ஆகா ஹாஷ்ரா காஷ்மீரி, ஹக்கீம் அஹமத் சூஜா, பிரேம் சந்த், அப்பாஸ் அலி, நரோட்டம் வியாஸ், வகீப், கேளரி சங்கர் லால் அக்தார், சிவகுமார், காஸ்யப் இவர்களைப் போன்றவர்களைப் பற்றி தங்கள் அபிப்பிராய மென்னவோ?

பதில்:— மிகவும் சங்கடமான கேள்வி! சொல்லித்தான் தீர வேண்டுமென்றால், மனதிலுள்ளதை மறைவின்றி அப்படியே சொல்லி விடுகிறேன். ஆகா சாஹேப் வசனக் கவிதை எழுதுவதில் பேராற்றலுள்ளவர். இணையற்ற நாடகாசிரியர். உவமைகளிலும், கிண்டல்களிலும், குத்தல்களிலும் நிபுணர். சக்தி ததும்பி, பூரணமான உச்சரிப்புகளுடன் ஒலிக்கும் வாக்கியங்களை எழுதுவதில் இவருக்கு போட்டியே இருந்தது கிடையாது. ஆனால் படக் காட்சிக்கு சாஹேப்பின் எழுத்துக்கள் போதாது, என்பதே எனது எண்ணம்.

‘கார்வான்—ஈ—ஹயாத்’ படத்தில் ஹக்கீம் அஹமது சூஜாவின் சம்பாஷணைகள் உயிரில்லை, உணர்ச்சியில்லை. தாறு மாறாக சேர்க்கப் பட்ட முத்து மாலையைப் போலிருக்கிறது அவைகள். இன்னும் நல்ல சிரத்தையை யெடுத்துக் கொண்டு வேலை செய்தால், இவர் பயனுள்ள, உயிருள்ள சம்பாஷணைகள் எழுத முடியும்.

பிரேம் சந்த்ஜி இந்தியாவில் இணையற்ற நாவலாசிரியர். அவரது அழியா இலக்கியத்திற்காக அவரிடம் எனக்கு பெருமதிப்புண்டு. ஆனால், படக்காட்சித் தொழிலில், இந்த பெரிய மனிதரின் எழுத்துக்கள் அவ்வளவு நன்றாக இருப்பதாகச் சொல்ல முடியாது.

காலஞ்சென்ற அப்பாஸ் அலி நாடக காவியமான, “சதி மஞ்சரி”யை எழுதியவர். நாடக உலகில் ஆகா சாஹேப்புக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தவரும் இவர்தான். இவரால் சம்பாஷணைகள் எழுதப்பட்டு வெளிவந்த “அப்ஸல்” என்ற பவனானி படத்தைப் பார்த்தேன். சம்பாஷணைகள் பிரமாதமானவை என்று நான் கருதவில்லை.

நரோட்டம் வியாஸ் படக்காட்சிக்கு எழுதுவதற்கே லாயக் கற்றவர். அவரது நடையோ ஒரே குளறுபடி பதப் பிரயோகங்களிலும் ஒரே அமளி. ஏற்கனவே அவர் எழுத்துக்களில் ஏற்பட்ட தோல்விக்கு சிகரமாக இப்போது ‘அமரஜோதி’யின் சம்பாஷணைகள் விளங்குகிறது. இதில் இவரால் எழுதப்பட்ட சம்பாஷணைகள் பாராட்டத் தக்கவையல்ல. இந்த மகத்தான படத்தில் பாதி உணர்ச்சி, இவரது அழுகல் பாட்டுகளாலும், மோசத் தனமான சம்பாஷணைகளாலும் தான் கொல்லப்படுகிறது. படக்காட்சிகளுக்கு எழுதுவதென்ற தொழிலில் இவர் நுழைந்து கொண்டு இந்த மாதிரி களேபரம் செய்யக்கூடாதென்பதே எனது தாழ்மையான கருத்து. வக்கீப் ஹிந்தியைப் பற்றி ஒன்றுமே தெரியாதிருந்தும்,

ஹிந்தி சம்பாஷணைகளெழுதும் போது முயற்சிகள் செய்யும் ஒரு ஆசாமியைப்பற்றி என்னை ஏன் கேட்கிறீர்கள்?

கௌரி சங்கர்லால் அக்தார்; படக் காட்சிகளுக்காக எழுதுகிறார்? ஆனால், ஐயோ, அவர், என்ன குழப்பத்தை விளைவித்து விடுகிறார். அவரது பட சம்பாஷணைகள் கந்தலானவை. அவர் எழுதுவது அபிசினியர்களின் பாஷையைப் போல் தொனிக்கிறது.

சிவகுமார் நன்றாக சரியாக எழுதுகிறார். ஆனால் நடையில் அலங்கார மில்லை. அவரால் எந்த விதமான பாட்டுகளும் கட்ட முடியாது. பாட்டுகள் புனைவதற்கும் அவர் முயற்சி எடுக்கக் கூடாது.

கஸ்யப்! அவரை ஒரு எழுத்தாளர் என்று கருதவே நான் மறுக்கிறேன்.

இம்பீரியலைச் சேர்ந்த டைரக்டர் சௌத்ரி, மோஹன்லால் தேவ் இவர்களும் மோசமான சம்பாஷணைகளெழுதுவதில் நிகரற்றவர்கள்.

கேள்வி 6. நல்ல சம்பாஷணைகளைக் கொண்டிருப்பவை எவ்வெப் படங்கள் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

பதில்:— "தேவி தேவயானி" (ரஞ்சித்) "ராதா ராணி" (ரஞ்சித்) "பால ஜோபன்" (கர்தார்வா) இவைகளின் சம்பாஷணைகள் உன்னத மானவை. மற்ற படங்களில் சம்பாஷணைகள் சுமாராக இருக்கின்றன—அல்லது ஒரே மோசமாக இருக்கின்றன.

கேள்வி 7. "தேவதாஸ்" "அமரஜோதி" "கோயில் மணிகள்" 'டாக்டர் மதுரிகா' ஆகிய படங்களின் சம்பாஷணைகளைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:— இலக்கியத்தை ஆதர்சமாக வைத்துக் கொண்டு பார்த்தால் 'தேவதாஸ்' சம்பாஷணைகள் மோசமாக எழுதப் பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் பேசப்படும் மாதிரியில் அழகுள்ளவைகளாகி சபையினர் மனதைக் கவர்கின்றன.

'அமரஜோதி'—சம்பாஷணை எழுதியவரால் இப்படம் கொலை செய்யப் பட்டு விட்டது. எழுத்தாளனின் மோசமான பேனா மட்டும் இல்லா திருந்தால் சக்தி வாய்ந்த செய்தியை உலகத்துக்குப் பறையறைவிக்கும் சந்தர்ப்பம் இந்தப் படத்திற்குக் கிடைத்திருக்கும். பாட்டுகளும், வெறும் ஹம்பக்.

"கோயில் மணிகள்" இம்பீரியல் கம்பெனியாரின் படம். டைரக்டர் சௌத்ரியால் எழுதப் பட்டது. சம்பாஷணைகள் எழுதுவதைப் போல் சௌத்ரி நடிப்பது கேலிக் கூத்தாக யிருக்கிறது. அவர் எழுத்தாளரே யல்ல.

உருது தெரிந்த முஸ்லீமான வக்கீப் தான், 'டாக்டர் மதுரிகாவில்' ஹிந்தி எழுத முயற்சித்தார். இந்தப் படத்திலுள்ள சம்பாஷணைகளில் பிழைகள் மலிந்துள்ளன. நடை மோசம்.

கேள்வி 8. சம்பாஷணைகளில் பெரிதும் சிரத்தை காட்டிவரும் கம்பெனிகளைத் தாங்கள் கூற முடியுமா?

பதில்:— இதுவும் கஷ்டமான கேள்விதான். சரியான, உன்னதமான சம்பாஷணைகளுடன் படத்தைத் தயாரிப்பதில் பெரு முயற்சி எடுத்துக் கொள்பவர்கள் பிரபாத் கம்பெனியார்களே ஆவார்கள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாய் பூரண திருப்தி யளிக்கக் கூடிய எழுத்தாளர்கள் அவர்களுக்கு இன்னும் கிட்டவில்லை. தவிரவும் இந்தக் கம்பெனியில் மஹாராஷ்டிரர்கள் அதிகம் பேர். அவர்கள் தொண்டை ஹிந்து-உருது பாஷையை உச்சரிப் பதற்கு அவ்வளவு பொருத்தமானவைகளல்ல. ஆகலின் பிரபாத் நடிசர்களின் சம்பாஷணைகள் அவ்வளவு 'ஒரிஜினலாக' இருப்பதில்லை.

அடுத்தபடி நல்ல சம்பாஷணைகளை ஜனங்களுக்குக் கொடுக்க முயற்சிக்கும் கம்பெனி நியூ தியேடர்ஸ். அவர்கள் எழுத்துக்களை மட்டும் இன்னும் கொஞ்சம் மெருகிட்டு விட்டால் சம்பாஷணைகளில் அதுவே முதல் ஸ்தானம் பெற்று வரும். ரஞ்ஜித் கம்பெனி, சம்பாஷணைகளில் ஒரு காலத்தில் இருதய பூர்வமாக உழைத்து வந்தது. ஆனால் இப்போது அப்படி யில்லை. சாகர் கம்பெனியார் நல்ல சம்பாஷணைகளைத் தான் பொறுக்க முயற்சிக்கின்றனர். ஆனால் அவர்களுக்கே நல்லது கெட்டது என்ற வித்தியாசம் தெரியாமல் போய் விடுகின்றது.

இம்பீரியல் சுத்தமோசம். மற்ற கம்பெனிகளைப்பற்றி பேசக் கூட யோக்கியதை கிடையாது.

கேள்வி 9. டைரக்டருக்கு சம்பாஷணைகளின் பாஷை, உத்வேகம் இவைகள் நன்கு தெரிந்திருக்க வேண்டுமென்று தாங்கள் கருதுகிறீர்களா?

பதில்:—டைரக்டருக்கு பாஷை தெரிந்திருந்தால் அது மிகவும் நல்லது. படத்திற்கும் நன்மை, எழுத்தாளனுக்கும் நன்மை. எப்படியும் சம்பாஷணையிலுள்ள ஒவ்வொரு பதத்தின் அர்த்தமும், உணர்ச்சியும் டைரக்டருக்குத் தெரிந்தே யாக வேண்டும்.

கேள்வி 10. டைரக்டர்களில் யார் யார் சம்பாஷணைகளின் போக்கைச் சரியானபடி

உணர்பவர்கள்?

பதில்:— பாபுராவ் படேல் ஒருவரே நமது சினிமாத் தொழிலில் மிகவும் வல்லவர், இவர் ஒரு பெரிய அறிஞர். சம்பாஷணைகளை எடை போடுவதில் இவருடன் போட்டி போட வேறு நபர் கிடையாது.

டைரக்டர் சௌத்ரிக்கும் ஹிந்தி, உருது இவைகளில் போதுமான ஞானமுண்டு. சுமாராக சம்பாஷணைகளின் மதிப்பு இவருக்கு தெரியும்.

அடுத்தபடி சாந்தா ராம். சிருஷ்டிப்புச் சக்தியில் பெரிய நிபுணர். சினிமாக் கலை நுணுக்கங்கள் தெரிந்த டைரக்டர் இந்தியாவில் இவர் ஒருவரே. இவருக்குள்ள சம்பாஷணை ஞானம் உயர்ந்த தல்ல. டைரக்டர் நித்தின்போஸ் சினிமா கலை நுணக்கங்கள் தெரிந்தவர். அவ்வளவுதான் சொல்ல முடியும். தேவகி போஸைப் பற்றி யார் என்ன சொன்ன போதிலும், சம்பாஷணைகளைப் பொறுத்த பட்டில் அவரை நான் பாராட்ட முடியாது.

சந்து லால் ஷா, டைரக்கர் விநாயக், டைரக்டர் பாரமி இவர்களெல்லாம் சினிமாக் கலை நுணுக்கங்களில் சற்றுத் தேர்ச்சி பெற்றவர்களானாலும் சம்பாஷணைகளில் மிக மிக அற்ப ஞானம் கொண்டவர்களாவார்கள்.

கேள்வி 11. சம்பாஷணைகளில் இன்று வல்லவர்கள் யார்?

பதில்:—சந்திர மோஹன் (பிரபாத்) ஒருவர்தான் இந்தியாவிலேயே உருது—ஹிந்தி ஆகிய இரண்டு பாஷைகளையும் மிகவும் நன்றாகப் பேசுபவர். இரண்டாவதாக வருபவர் பிரிதிவிராஜ். ஜெகதீஸ், ஹிந்தி பேசுவதில் நிபுணர். அவரது உருதுவும் நேர்த்தியாக உள்ளது. ஸஹ்ஹல் ஹிந்தியைவிட உருதுவே நன்றாகப் பேசுகிறார். மஹாராஷ்டிரான டைரக்டர் ஜாகீர்தார் (நடிகருமாவார்;) ஹிந்தி, உருது இவைகளை தப்பில்லாமல் நன்றாகப் பேசுகிறார். நஸீர் ஒருவர் தான் ஹிந்தியை நன்றாகப் பேசும் ஒரு முஸ்லிம். இவரது உருது அற்புதமானது. வங்காளிகளில் கே. ஸி. டே ஹிந்தி — உருது இவைகளை நன்றாகப் பேசுகிறார்...... இந்த ஜாபிதாவை சொல்லிக்கொண்டே போவதென்றால், இப்போது அவகாசமில்லை.

கேள்வி 12: பண்டிட்ஜி! பெண்களைப் பற்றி தங்கள்.......

பதில்:—போதும்! போதும்!! நிறுத்திக் கொள்ளுங்கள். நான் ஏதாவது பேச ஆரம்பித்தால் உண்மை தெரிவிக்க வேண்டி நேர்ந்துவிடும். தங்களைப் பற்றிய எந்தவிதமான உண்மைகளையும் பெண்கள் தாம் விரும்புவதில்லையே! போதும்......"

படமுதலாளிகளே!

உங்களுக்கு

ஆயில் பெயிண்டிங்

கலர் என்லார்ஜ்மெண்ட்

கலர் சிலேடுகள்

ஸ்டில் பிரிண்டிங்

போஸ்டர் டிசைன்கள்

கருத்தை விளக்கும்பேனர்கள்

விளம்பர போர்டுகள்

சினிமா விளம்பரங்கள்

கண் கவரும் கட் அவுட்கள்

லாரிசித்திர அலங்காரங்கள்

முதலியன குறித்த காலத்தில் குறைந்த சார்ஜில் செய்து கொடுக்கப்படும். ஒருமுறை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்

மற்ற விபரங்களை நேரிலாவது கடித மூலமாவது தெரிந்து கொள்ளவும்.

ஆர். சுந்தரேசன்,

ஆர்டிஸ்ட் & போடோகிராபர்,

51, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம்,

சென்னை.

பிரான்ஸெஸ் டிரேக் என்னும் பிரசித்திபெற்ற சினிமா நடிகை.

3-வது
வெற்றி கரமான வாரம்

சென்னை கெயிட்டி தியேட்டரில்

1936ஹு ஆகஸ்டுமீ 15உ முதல் தினசரி இரண்டு காட்சிகள்.

இதர முக்கிய நகரங்களில் விரைவில் வெளிவரும்.
ஹாஸ்யம், காதல், பக்தி மிகுந்த தமிழ் பேசும் படம்

ஸ்ரீமதி பரிணயம்

அல்லது

ஸ்ரீராம ஜன்ம காரணம்

சிறந்த அமெச்சூர் நடிகர்கள்,
சங்கீத வித்வான்கள்

மாதிரிமங்கலம் நடேசய்யர்
நல்லூர் விஸ்வநாதய்யர்
மிஸ். பத்மா
மிஸ். கமலா

குஞ்சு பாகவதர்
மிஸ். ஸ்ரீமதி
மிஸ். துளசி

ஆர்செஸ்ட்ரா:

திருவிடமருதூர் ஸ்ரீமான். ஸ்ரீநிவாஸராவ்—கோட்டு வாத்தியம்
,, ஸ்ரீமான். ஹரிராவ் —பிடில்

கதை, வசனம், பாட்டு, டைரக்ஷன்:

ஸ்ரீ. டி. பி. கல்யாணராம சாஸ்திரிகள் பி. ஏ. பி. எல்.

படம் வேண்டுவோர் எழுதுக:—

ஸ்ரீ ராம் டாக்கீஸ்
கும்பகோணம்

தந்தி "கிரி"

அன்னா மே வாங் என்னும் சீனப்
பெண்ணின் கீழைத் தேச நாட்டியம்.
இவள் இணையற்ற சினிமா
நடிகையு மாவாள்.

முகப்புப் படம்

நியூ தியேடர்ஸ் கம்பெனியைச்

சேர்ந்த மிஸ். ராஜ குமாரி.

வீரா ஜோரினு என்ற பிரபல ருஷ்ய நடனமாது. இவள் ஸ்டாலின், முஸோலினி, ஹிட்லர் இவர்களால் நன்கு மதிக்கப் பட்டவள். ஒன்று சாதாரணத் தோற்றம், இன்னொன்று நாட்டியத் தோற்றம்.



'நகர தீபங்கள்' 'மாடர்ன் டைம்ஸ்' என்ற படங்களில் நடித்த பெரிய நடிகரான சார்லி சாப்ளினின் 'தலை' தான் இது. காதரின் ஸ்டியூ பெர்க் என்ற அமெரிக்கச் சில்பியே இதைச் செய்தவள். லாஸ் ஏஞ் ஜலீஸ் பொருட் காட்சிசாலையில் வைப்பதற்காக சார்லியின் முழுச்சிலை யையும் இவள் செய்து வருகிறாள். அதில் 'தலை'யை மட்டும் இங்கே கொடுத்திருக்கிறோம். வருங்கால சந்ததியினர்களுக்கு இந்தச் சிலை தான் 'சார்லி இருந்தது வாஸ்தவம் தான் கட்டுக் கதை யல்ல' என் பதை சொல்லிக்கொண்டிருக்கும். கீழே இருப்பவள் காதரின் ஸ்டீயூபர்க் (சில்பி)



எட்டி மக்னீல் (Eddie McNeal) என்னும் பிரசித்தி பெற்ற மல்யுத்தக்காரர்.
இவர் உடலின் ரம்மியம் யாரைத்தான் பொருமைப் படச் செய்யாது?



ஒரு அழகி

"தாஸி"

சென்ற நூற்றாண்டின் மத்தியில் டரீ (Paris) நகரத்தில் ஓர் அழகி தோன்றினாள்.

அவள் ஒரு பேரழகி. டரி நகரத்திலேயே அவளது கைகளும், பற்களும் மிகவும் அற்புதமான அழகு வாய்ந்தவை என்று பேசட்டட்டு வந்தது. அவளது புன்சிரிப்போ சூறைக் காற்றைப்போன்றது. அவளைச்சுற்றி வட்டமிட்ட ரஸிகர்கள் கூட்டம் மிகவும் பெரிது.

ஆனால் அந்த அழகியோ தனது காதலர்களைக் கொலை செய்து, அவர்களது தலைகளையும், உடல்களையும், உடல் நூல்காரர்களுக்கும் வைத்திய நிபுணர்களுக்கும் விற்று காசு சம்பாதித்து வந்தாள்.

அவளது பெயர் சீமாட்டி ஜேபூரிஸ்கி என்று சொல்லப்பட்டது. இது உண்மைப் பெயரல்ல வென்பது மட்டும் நிச்சயம். அவள் உண்மையில் லண்டனைச் சேர்ந்த ஒரு டெண்தான். அவள் திடீரென்று எண்டனிலிருந்து வெளியேறும்படியான நிலைமை யேற்பட்டு விட்டது.

அவள் லண்டனை விட்டு பரீ நகரத்திற்கு வந்ததும் ஒரு ஆங்கிலச் சீமாட்டியைப்போல் நடித்து வந்தாள். பின்னர் ஒரு ஐரிஷ் மாதைப்போல் தோற்றமளித்தாள்.

* * *

அவளைப்பற்றி நார்மன் ஹில்ஸன் (Norman Hilson) என்னும் ஆராய்ச்சிக்காரர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

"ஜெபூரிஸ்கியின் கட்டழகு பெரிய வீர புருஷர்களை யெல்லாம் கலங்கச் செய்தது. அவள் விடியற் காலையில் எழுந்து விடுவாள். எழுந்திருக்கும் போதே அவள் அறை முழுவதும் தீபங்களால் ஒரே சுடர் விட்டுப் பிரகாசிக்கும். அறையில் ரோமானிய கிரேக்க அழகர்களின் படங்களும், சிலைகளும் இருந்தன. அவைகள் முகத்தில் தான் அவள் முதலில் விழிப்பாள். பின்னர் அவளது தோழிப் பெண்கள் கீதங்களை வாத்தியங்களில் இசைப்பார்கள். இந்த கீதங்கள் யாவும் உள்ளத்திற்கு காமவெறியூட்டுவனவாகவே இருந்தன. அடுத்தபடி சித்திரப் பதுமையைச் சரிப்படுத்துவதுபோல், அவளது உடலைத் தோழிகள் சுகமாகப் 'பிடித்து' விட்டனர். அதற்குப் பின்னரோ அவளது ஸ்னானம் ஆரம்பமாகும். பால் நிறைந்த ஒரு தொட்டியில் ரோஜா மலர்கள் ஊறிக் கிடக்கும். அதில் அவள் நிர்வாணமாக இறங்கி 10 நிமிஷங்கள் வரையில் நீராடுவாள். அவள் நீராடுகையில் அருகில் ஒருவரும் இருக்கக்கூடாது. ஏகாந்தமாக நீராடிய பின்னர், அவள் அத்தொட்டியிலிருந்து எழுந்து, பன்னீரால் நிரப்பப்பட்டிருக்கும் மற்றொரு தொட்டியில் போய் விழுவாள். அங்கு வாசனைக் கலவைகளைக் கொண்டு அவள் தனது உடலை சுத்தம் செய்து கொள்வாள். மூன்றாவதாக அவள் சுத்தமான, ஒன்றும் கலப்பற்ற—பச்சை ஜலத்தில் ஒரு முழுக்குப் போடுவாள்........பட்டுகளால் ஈரத்தைப் போக்கிக்கொண்டதும், வாசனைப் புகை அவள் அங்கங்களையும் தேகத்தையும் உஷ்ணப்படுத்தும். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஜிலுஜிலு வென்று பிரகாசிக்கும் திராக்ஷை ரஸத்தை ஒரு கோப்பை பருகுவாள்...... அவள் மிகவும் நேர்த்தியான பட்டைத் தவிர மற்ற ஆடைகளை உடுத்தினதில்லை.

> பேரழகி ஜெபூரிஸ்கியின் சரித்திரம் மஹா பயங்கரமானது. அவள் அழகியாய்த்தானிருந்தாள். ஆனால் அவள் உள்ளத்தில் நஞ்சு கொந்தளித்தது. சமீபத்தில்தான் அவளைப்பற்றிய ஆராய்ச்சிகள் மேனாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரமாயின. அவைகளை ஆதாரமாகக் கொண்டே இந்தக் கட்டுரையை எழுதி யிருக்கிறாள். 'தாவி'
>
> —ஆசிரியன்.

அவளது தோழிப்பெண்கள் கூட சுந்தரிகளாகவே இருந்து வந்தனர். அவளைச் சுற்றியிருந்த தெல்லாம் அழகு, இனிமை அவ்வளவுதான். அவள் ஒரு பேரழகி. அவளது உடல் வர்ணனைக்கும் எட்டாத நிலையை அடைந்து விட்டது. அவள் முகத்தில் நிலவுச் சோதி வீசியது. அந்த அழகியின் சந்நிதானத்தில் வீரர்கள் தலைவணங்கினார்கள்."

* * *

இனி அவளது வாழ்க்கை வரலாற்றைக் கவனிப்போம்.

வருஷங்கள் கணக்கில் அவளுக்காக போட்டிக் காதலர்களுக்குள் யுத்தம் நிகழ்ந்து வந்தது. சிலர் அவளால் தற்கொலை செய்து கொண்டார்கள்.

அவள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டபோது பரீ நகரம் முழுவதும் திடுக்கிட்டு விட்டது. "ஐயோ ஒன்று மறியாத ஒரு பெண்மணியை இந்தப் பிசாசுச் சட்டம் அநியாயமாகக் கொலை செய்யப் போகிறதே" என்று ஒரு ராஜகுமாரன் அலறினான்.

"இவ்வளவு அழகுள்ளவளுக்கு இந்த மாதிரி பயங்கரமான செய்கைகளைச் செய்வது எப்படி சாத்தியமாகும்?" என்று அவன் கேட்டான்.

பெரிய ஹோட்டல்களின் மாடிகள்மீது உல்லாசமாக வந்து உட்காரும் இளைஞர்களெல்லாம் திடீர் திடீரென்று காணாமற் போய்விட்டனர்.

அதைப் பற்றி முதலில் யாரும் கவனிக்கவில்லை.

பரீ பெரிய நகரம். இன்று ஒருவன் புதிதாகத் தோன்றுவான். நாளை அவன் வேறு எந்த நகரத்துக்காவது சென்று விடுவான். அந்த முகத்தை அடுத்த நாள் கலேயில் பார்க்கலாம்.

ஆனால் எவிலி என்ற ஒரு இளம் போலீஸ் அதிகாரிக்குமட்டும் திருப்தி எற்படவில்லை. அவனது நண்பர்களில் பலர் இருந்தாற் போலிருந்து, யாதொரு தகவலு மின்றி மறைந்து விட்டதைப்பற்றி அவன் கவலை கொண்டான்.

அந்தத் துப்பறிபவன் நடத்திய விசாரணையிலிருந்து, ஏறக்குறைய எல்லாரும் அந்த ஹோட்டலுக்கு வந்து ஒரு தடவையாவது, மற்றொரு தடவையாவது சீமாட்டி ஜெபூரிஸ்கியைச் சந்தித்திருக்கின்றனர் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டான்.

அதன்மீது எவிலி தனது தலைவனிடம் சென்று சந்தேகங்களை வெளியிட்டான். தலைவனோ சிரித்தான். ஆனால் அவன் அதை அடியோடு புறக்கணிக்கவில்லை.

* * *

ஒரு நாள் பிற்பகல் ஸெயிண்ட் ஆண்டனி விடுதிப் பக்கமாக உள்ள ஒரு நந்தவனம் பக்கமாக அவன் நடந்து சென்றான். அங்குதான் சீமாட்டியும், அவளது தோழியும் காற்று வாங்குவது என்பது அவனுக்குத் தெரியும். அவளில்லாமல் அந்த 'புண்யவதி'யை எங்கும் கண்டதில்லை.

அன்று நல்ல வெய்யில். எவிலி ஒரு மரத்தினடியில் நிழலுக்காக தங்கினான். அப்போது சீமாட்டியும் அவளது தோழியும் அங்கு ஒரு பெஞ்சின்மீது உட்கார்ந்திருந்ததை அவன் கண்டுவிட்டான்.

உடனே அவன் தைரியமாக அங்கு சென்று, அதே பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு, 'அவன்...... என்ன இன்று ஒரே புழுக்கமாயிருக்கிறதே', என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். அப்போது சீமாட்டியின் தோழியும், ''ஆமாம்! அதை ஏன் கேட்கிறீர்கள். பொசுக்கித் தள்ளுகிறது'' என்று சிநேக பாவமான குரலில் அதை ஆமோதித்தாள். சில நிமிஷங்களுக்கெல்லாம் சம்பாஷணை ஆரம்பித்து விட்டது.

சீமாட்டி ஜெபூரிஸ்கி கலகல வென்று நகைத்தாள். அந்த வெண்கலச் சிரிப்பு அவனுக்கு நிமிஷத்தில் வெறியேற்றி விட்டது. உடனே அவனது அழகைப் பற்றி வர்ணிக்க ஆரம்பித்து விட்டான். அவளும் ''நீங்கள் மட்டும் என்ன அழகில் குறைவா?'' என்று ஒரு 'போடு' போட்டாள்.

முடிவில் அன்று மாலை அவனைத் தன் வீட்டில் விருந்துக்கு வருமாறும் அவள் அழைத்து விட்டாள். அதை அந்த க்ஷணத்திலேயே ஒப்புக்கொண்டான் அந்தத் துப்பறிபவன். ஆனால் வழியில் தான் மடத்தனமாய் நடந்துகொண்டதாகக் கருதினான். எதற்காக அவ்வளவு சீக்கிரத்தில் தன்னை விருந்துக்சழைக்க வேண்டுமென்பதே அவளது முக்கிய சந்தேகம். உடனே தனது தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று வரலாற்றைக்கூறி, இரண்டு அதிகாரிகளை சீமாட்டியின் வீட்டெதிரில் காவல் போடும்படிக்கும், ஏதாவது 'சம்சயம்' ஏற்பட்டால் தாக்ஷண்யமின்றி அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்.

தலைவரும் அவ்வாறே செய்ய சம்மதித்துவிட்டார். பாபர்க்கிலுள்ள ஒரு கட்டிடத்தில் நுழைந்தான் எவிலி. அந்தக் கட்டிடம் ஒருவிதமான சஞ்சலத் தோற்றத்தை அளித்தது. மூன்றாவது மாடியில் தான் சீமாட்டி வசிக்கிறாள். முதல் இரண்டு மாடியிலும் ஒரு மனிதர் கூட காணப்படவில்லை.

எவிலியின் இருதயமோ மணிக்கு நூறு மைல் வேகத்தில் அடிக்க ஆரம்பித்து விட்டது. ஆயினும் துணிந்தே சென்றான்.

அங்குதான் அந்த சீமாட்டி அலங்கார பூஷணியாய் வீற்றிருந்தாள். அவனைக் கண்டதும் அவள் தனது இருக்கையினின்று எழுந்தாள். அவள் நடையின் சொகுசும், அசைவின் அழகும், நகைப்பின் காட்சியும், குழையும் இடையும், விம்மி விழும் ஸ்தன பாரங்களும் எவிலியின் மனத்தைப் பைத்தியமாக்கி விட்டன. முத்தமிட வேண்டி தனது கையை அவனிடம் நீட்டினாள் சீமாட்டி. ''எனது தோழி உடைகளைத் திருத்திக்கொண் டிருக்கிறாள். அவள் இதோ வந்துவிடுவாள், நீங்கள் அதற்குள் இதைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்'' என்று கூறி அவள் திராக்ஷைக் கோப்பையை அவன் வசம் கொடுத்தாள்.

துப்பறிபவன் தலைவிதி கெட்டியாயிருந்ததால், அவனுக்கு கொஞ்சம் உணர்வு தோன்றியது.

''எனக்குப் பழக்கமே கிடையாது. குடித்தால் பிணம்மாதிரி விறைத்துப் போய்விடுவேன்'' என்று மெள்ள பதில் சொன்னான். அதேசமயம் அவளது முகம் க்ஷணத்தில் மாறியதும் அவனது கூறிய கண்களுக்குப் படாமலில்லை.

திரும்பிப் பார்த்தான். அவை அலங்காரமாயிருக்கிறது. படிக்கட்டுகளோ இருண்டு கிடக்கின்றன. அது அவன் மனதை இன்னும் திகில் படுத்தியது.

பின்னர் சீமாட்டி அவன் கையை வலியப்பிடித்து தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டாள். அவள் கரங்கள் அவனது தோளைச் சுற்றின. எவிலியும் இளைஞன் தானே! 'மின்சாரம்' 'ஜிவ்' வென்று ஏற ஆரம்பித்து விட்டது.

அவன் அறிவிழந்து விட்டான். அவளைக் கட்டியணைத்தான். மார்பிறுகத் தழுவி, அவள் அந்தரங்களை எச்சில் மயமாக்கிவிட்டான்.

அரைமணி நேரம் இந்த காதல் விளையாட்டு நடந்துகொண்டிருந்தது. இருந்தும் அவள் தோழி பிரசன்னமாகவில்லை.

இருவரும் அமளியில் புரண்டனர்.

அப்போது அவள் அவனிடம் ஒரு கைக்குட்டையைக் கொடுத்து அதன் சுகந்தத்தை முகருமாறு கூறினாள். ஆனால் காமவெறியிலிருந்த துப்பறிபவ

னுக்கு "குளோரோபாரம்" வாசனை மட்டும் தெரியாமற் போகவில்லை. கீழேயிருந்து கேட்ட ஊது குழல் சப்தங்களிலிருந்து, தனது நண்பர்கள் காவல்புரிந்து வருகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான். திடீரென்று வெறியை உதறித் தள்ளினான். அங்கிருந்த முக்காலியை எடுத்து அங்கு காணப்பட்ட கண்ணாடி ஜன்னல்மீது வீசியெறிந்தான்—போலீஸ்காரர்களை உஷார்ப்படுத்த.

சீமாட்டி அப்போது வெறும் அழகுப் பதுமையாக நிற்கவில்லை. க்ஷணத்தில் அவள் சிங்கமாகிவிட்டாள். ஒரு பயங்கரமான கூச்சலுடன் அவன் தொண்டையை நோக்கிப் பாய்ந்தாள் ஜெபூரிஸ்கி. 'உதவி! உதவி!' என்று கத்தினாள்.

ஒரு க்ஷணத்திற்கெல்லாம் மூன்று கட்டுவாய்ந்த மனிதர்கள் மின்னும் வாட்களுடன் அந்த அறையில் தோன்றினார்கள்.

"கொல்லுங்கள் இவனை, தொண்டையை அறுத்துத் தள்ளுங்கள்" என்று சீறினாள் அவள்.

ஆனால் தாமதமாகிவிட்டது, ஜன்னல் உடைந்து வீழ்ந்ததால், எச்சரிக்கை யடைந்த போலீஸ்காரர்கள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து விட்டனர். துப்பாக்கிகள் வெடித்தன. வாட்களேந்திய மூவரும் ரத்தக் காயங்களுடன் தரையில் சாய்ந்தனர். அங்கு நடந்த அமளியில் அறையிலிருந்த ஒரு திரை கீழே விழுந்துவிட்டது! ஆ! அப்போது அங்கு கண்ட காட்சி அனைவரையும் நடுங்கச் செய்துவிட்டது. இன்னும் உடல்நூற்காரர்களுக்கு விற்பனையாகாத தலைகள் வரிசையாக அங்கு காணப்பட்டன.

பின்னர் அவள்மீது வழக்கு நடைபெற்றது. அதில் அவள் இளைஞர்களை தனது வீட்டில் வரவேற்றுக் கொள்வதும், பின்னர் அவர்களை மயக்கி, அவள் கையினாலேயே அவர்கள் தலைகளை வெட்டியும், அவைகள் விற்றும் பணம் திரட்டிவந்தாள் என்பது வெளியாயிற்று.

சிரசற்ற முண்டங்கள் வைத்தியக் கல்லூரிகளுக்கும், இன்னும் சில 'வேலைக்காரர்களுக்கும்' விற்கப்பட்டு வந்தன.

அவள் அழகினால் மயங்கிய நீதிபதி அவளுக்கு மரண தண்டனை விதிக்கவில்லை. அவளுக்கு ஜன்ம தண்டனைதான் விதிக்கப்பட்டது. ஆனால் அவள் தோழர்களெல்லாம் சர்க்கார் வெட்டுக் கத்திக்குப் பலியானார்கள்.

இந்தப் பேரழகியினது பயங்கரமான பல உண்மைகள் இன்னும் பிரஞ்சு போலீஸ் ரகசிய இலாகா ரிகார்டுகளில் காணப்படுகின்றன.

காரம், குணம், மணம்,
ஆரோக்யம் இவைகள்
ஒருங்கே அமைந்த

வி-எச்-ஆர்.
பெருங்காயம்
எல்லா இடங்களிலும்
கிடைக்கும்.

வார்ஜிவான்தாஸ் ஹிர்ஜி
அண்டு கம்பெனி,
194, கோவிந்தப்ப நாய்க்கன்
தெரு, ஜி. டி. சென்னை.

இதுவரை வந்த தமிழ் படரு
கள் ஒன்றும் பூரண திருப்தி
யளிக்கவில்லை என்பது
தானே உங்கள்
குறை?

இதோ

உங்கள் குறை தீர்க்கவும் தமிழ் நாட்டிலும் வட நாட்டு படங்களுக்கும், இதர மேல் நாட்டுப் படங்களுக்கும் இணையான உயர்தர படங்களைத் தயாரிக்க முடியும் என்பதை கண்கூடாக நிரூபித்துக் காட்டவும்..........................பொருக்கி யெடுத்த சிறந்த நடிகர்களை கொண்டு ஏராளமான பொருட் சிலவில்

கதைச் சுவை, சினேரியா, டைரேக்ஷன் மேக் அப், (வேஷப் பொருத்தம்)
நடிப்புத்திறமை சங்கீதம், படம்பிடிப்பு, ஒலிப்பதிவு ஆகிய
ஒவ்வொரு அம்சங்களும் தனித்தனியே சிறந்த முறையில்
அவ்வத்துறையில் அனுபவமும் கியாதியும் வாய்ந்த,
நிபுணர்களால் கவனிக்கப்பட்டு,

தமிழ் நாட்டிற்கு தனிப்பெருமை அளிக்கவரும் பேசும்
படமாயும் தயாராகிறது!

எது? தென்னாட்டிற் புகழ்பெற்ற நாவலாசிரியர்
ஸ்ரீமான் J. R. ரங்கராஜுவின்
நாவல்களில் சிறந்த, இணையற்ற, சமூக சீர்திருத்த

துப்பறியும் தமிழ் நாவல்

: : சந்திரகாந்தா : :

சமூகத்திலுள்ள ஊழல்களையும், அட்டூழியங்களையும், வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும், சித்தரித்துக்காட்டி, மக்களுக்கு உண்மை அறிவூட்டி, தேசிய முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான சமூகத்திற்கும் நன்மை அளிக்க வருவது.

சினேரியோ	ஸ்டுடியோ
P. K. ராஜா சாண்டோ	சரஸ்வதி சினிடோன் பூனா.

ஜூபிடர் பிச்சர்ஸ் லிமிடெட், திருப்பூர்.



ஆத்மசக்தி—தேகாரோக்கியம்

[புரொபஸர் மகமது லால்]

ஆத்ம சக்திக்கும், தேகாரோக்கியத்துக்கும் உண்மையில் எப்போதும் தொடர்பிருந்தே தீரவேண்டும். இத்தொடர்பு மிகவும் நெருங்கியிருந்தால் நல்லது. எங்கு உண்மையான ஆத்மசக்தி இல்லையோ, அங்கு நல்ல திடதேகமில்லை. நல்ல தேகாரோக்கியமான சரீரத்திலேயே ஆத்மசக்தியை அபிவிருத்தி செய்ய முடியும்.

ஆத்மசக்தியை போதுமான அளவு விருத்தி செய்து அதற்கு வலிமை அளித்தால்தான், நாம் இயற்கையின் கோளாறுகளையும், காம உணர்ச்சிகளையும், எதிர்த்து, அவைகள் தூண்டுதல்களினின்று நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

எங்கு உடல் நல்ல நிலையி லிருக்கிறதோ, எங்கு மனம் பரிசுத்தமாக இருக்கிறதோ, எங்கு ஹிருதயம் திடமாக இருக்கிறதோ, அங்கே பலமான ஆத்ம சக்தி சான்னித்தியமாகும்.

நல்ல வளமையுள்ள மனத்திற்கு ஆதாரம் வளமையுள்ள உடல் என்றே கூறவேண்டும்.

ஜூலியஸ் சீசர் ஒரு சாக்கா வலிப்பேர்வழி. இந்த நோய் அவனுக்கு 'பரம்பரையாக' வந்த சொத்து. இதனால் அவன் ஆயுள் முழுவதும் தாக்கப்பட்டான். அவன் ஜீவியம் பூராவும் இந்தப் பரம்பரை மூலமாக வந்த நோயோடு, இடைவிடாத தேசப்பயிர்சிகள் மூலம் போராடி வந்தானென்றும், சாதாரண உணவையே அவன் உண்டுவந்தானென்றும் சரித்திர ஆதாரங்களில் காணக்கிடக்கிறது. அவனது முகமும், உடலும் அவன் காலத்திலிருந்த மற்ற ரோமானியர்களினின்று மாறுபட்டு தனித்தே நின்றது. ரோமானியர்களில் அவன் மூதாதையர்களும் அப்படியிருந்ததில்லை; அவன் காலத்தவர்களும் அப்படி இருந்ததில்லை; அவனுக்குப் பின் வந்தவர்களும் அப்படியிருந்ததில்லை. ஏனெனில், அவன் ஒல்லியாகவே இருந்தான்.

அவனுக்கு முன்பிருந்த ரோமானிய சர்வாதிகாரிகள் ஒரு பல்லக்கில் உட்கார்ந்து குஷியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் சீசரோ படைகளுக்கு முன்பு நடந்தோ அல்லது குதிரைமீது சவாரி செய்தே சென்றான் என்று சரித்திரங்கள் கூறுகின்றன. யுத்த காலங்களில்கூட அவன் ராணுவவீரர்களின் ஆகாரத்தையே உண்டு வந்தான். சில சமயங்களில் அவனுக்கு ஒரு நிமிஷம் கூட ஓய்விருந்ததில்லை. ஒரு பக்கம் ராணுவங்களுக்கு உத்திரவுகளும் குறிப்புகளும் கொடுக்கவேண்டும்; மற்றொரு பக்கம் பகைவர்களின் சதிகளைக் களைய தந்திரங்களைக்கொட்ட வேண்டும்; இன்னொரு பக்கம் சமஸ்தானத்திலேயே நடக்கும் துரோகங்களிலிருந்து தன்னைக்

காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; வேறொரு பக்கம் நாட்டின் பிரஜைகள் குறைகளைப் பரிகரிக்க வேண்டும்........ இத்யாதி வேலைகளும் திடீரென்று மலைபோல் குவிந்து விடும்போது சீசர் பல நாட்களுக்கு ஆகாரம் சாப்பிடமாட்டான்; நீரும் பருக மாட்டான்; மாதர் சல்லியாட்டங்களில் மனம் வைக்கமாட்டான்.

"ரொம்பவும் காமாதுரன்' என்று சீசரை அழைக்கிறார் அறிஞர் ஸ்ரீ எச். ஜி. வெல்ஸ் (H. G. Vells) வாஸ்தவம் ஆனால், சுயநல மற்ற அந்தச் சர்வாதிகாரியை உண்மையானபடி மதிப்புப்போட ஸ்ரீ எச். ஜி. வெல்ஸ் தவறிவிட்டார் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். இந்த உலகத்தின் புராதன காலத்திய மகத்தான அந்த மனிதன் சில சிற்றின்ப வெறியாட்டங்களில் பகிரங்கமாக ஈடுபட்டிருந்தாலும், எந்த சந்தர்ப்பதிலும், எந்தக் காலத்திலும், எப்போதும் அந்த வெறியாட்டங்கள் அவன்செய்துமுடிக்கவேண்டும் என்று நிச்சயித்து விட்ட காரியங்களில் குறுக்கிட்டதில்லை; அப்படி குறுக்கிட்டபோதிலும் அவை வெற்றி கண்டதில்லை. கிளியோபாத்ராவின் சண்டமாருத அழகுகூட அவன் மும்முரமாக சில வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது அவனை மயக்கமுடியாது போய்விட்டது. தனது இன்ப நுகர்ச்சிகளுக்காக ரோமானிய சாம்ராஜ்ஜியத்தின் பெயரைக் கறைப்படுத்த அவன் சித்தம் கனவிலும் கருதியதில்லை. அவனுக்கு விரோதமாக சதியிட்ட பிரபுக்களெல்லாம் இந்த விஷயத்தில் சீசரைக்கண்டு பெரிதும் திகைப்புற்றார்கள்.

(1)

சீசரது கலங்கா உள்ளத்தை அவர்கள் உண்மையில் ரஸித்துப் பாராட்டினார்கள். அவனைக் கடைசியில் கொலை செய்தவர்களில் புரூடஸ் ஒருவன் நீங்கலாக மற்றவர்களெல்லாம் வெறும் அயோக்கிய சிகாமணிகள்; குடியர்கள்; வெறியர்கள்; சிற்றின்பத்தில்வீழ்ந்துவிடும்தருணத்தில் நாய்களாகப் போய்விடுபவர்களாகவே இருந்தனர்.

ஆதலின் சீசர் "ரொம்பவும் காமாதுரனாயிருந்தான்" என்று சொல்வது தவறு. காமத்திலும் அவனுக்கு அறிவு குலைந்ததில்லை; ஆண்மை தளர்ந்ததில்லை.



(2)

(1) இக்கட்டுரை எழுதியவர்.

(2) இவர் உடலின் கட்டழகு.

(3) இவர் தசைகளின் போக்கு.



(3)

மற்றொரு குறிப்பிடத் தக்க ஆசாமி கார்டினல் ரிஷ்பல்யூ (Cardinal Richelieu) அந்த பெரிய

மனிதர் உடலில் நோய் வேரோடிப் போய்விட்டது. அவரும் சிற்றின்ப விஷயங்களில் ஈடுபட்டிருந்தார். சீசரை போலவே ராஜீய விவகாரங்கள் முழுவதும் அவர் கையில்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவரின் "சாணக்கிய சாஹஸங்கள்" உலகத்தையே ஸ்தம்பிக்கச் செய்யக் கூடியவை. சற்றுவது ஒப்வு பெற முடியாத மனிதர்களில் அவரும் ஒருவர். ஆனல்! அவரும் களியாட்டங்களில் அவ்வளவு மூழ்கியது கிடையாது. அவர் உடலும் ஒல்லியாகத்தான் இருந்தது. ஆனல் அழகின் சக்தி சுடர் விட்டுப் பிரகாசித்தது. அவர் தேகப்பயிற்சிகளை சரிவர செய்து வந்ததோடு, ஆகாரங்களையும் 'கணக்காக' சாட்பிட்டு வந்திருக்கிறார்.

இங்கிலாந்தில் 3-வது வில்லியம் அரசனும் இப்படித்தான் ஒரு நோயாளி. ஆனல் அவனும் வாழ்க்கையில் பெரிய பிரபலஸ்தனுகவே திகழ்ந்தான்.

இனி நமது நாட்டில் கொஞ்சம் எட்டிப் பார்ப்போம்.

ஆலம்கீர் (ஔரங்கசீப்) பிறவியிலேயே ஒரு நோயாளி. ஆனல் சற்றும் உடலும் உள்ளமும் தளாராதவ ராயிருந்தார். அவரது காலத்தில் முகலாய சாம்பிராஜ்ஜியம் பொடிப் பொடியாகச் சிதறிக் கொண்டிருந்தது. எதிரிகள் சூழ்ச்சிகளோ ஏராளம். அந்தப்புர விவகாரங்களோ அவர் உள்ளத்தைப் பிடுங்கித் தின்றன. இந்த நிலையில் அவர் போராடினுர்; சூழ்ச்சிகள் செய்தார்........... நிர்வாகம் நடத்தினுர். சிவாஜி, ஷாஜாஹான், அசோகன், பாபர், இவர்களெல்லாம்கூட அவ்வளவு திடசரீரம் படைத்தவர்களல்லர். நோயாளிகளாகவே இருந்து வந்தனர். ஆனல் இவர்கள் சாதித்த காரியங்களை சரித்திரத்தின் எடுகள் ஒவ்வொன்றும் போற்றிப் புகழ்கின்றன.

ஆக மேற்குறித்தவர்கள் நோயாளிகளாக இருந்தார்க ளானுலும் அவர்கள் தளராத் தேகப்பயிற்சியினுலும், அளவான ஆகாரங்களினுலும், தங்கள் உடல்களை உறுதிப்படுத்திக் கொண்டதினுல், ஆத்ம சக்தி அவர்களிடம் நிலைபெற்றுவிட்டது. இந்த ஆத்ம சக்தியினுலேயே அவர்கள் எந்த ஆபத்துகளையும் துரும்பெனக்கருதி வாழ்க்கையில் வெற்றி பெற்ருர்கள். ஆத்ம சக்தி மட்டும் அவர்களுக்கு இல்லாமற் போயிருக்குமானுல், அவர்கள் அவ்வளவு நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருக்கவே முடியாது.

பலருக்கு நல்ல தேகாரோக்கியம் சாதாரணமாகவே அமைந்து விடுகிறது. நாம் மற்றும் சற்று கவனம் செலுத்தினுல் இருக்கும் சில்லறை வியாதிகளும் நிமிஷத்தில் நீங்கிப்போய் விடும் என்று டாக்டர். எட்மண்ட் கூறுகிறுர். இதில் பெரிய உண்மை அடங்கிக் கிடக்கின்றது.

ஆனல் சிலர் உள்ளத்தைபோன போக்கில்விட்டு விட்டு, சிற்றின்ப லீலைகளில் மூழ்கித் திளைக்கின்றனர். முடிவு என்ன? அவர்கள் உடலும், உள்ளமும், உயிரும் தேய்ந்து விடுகின்றன.

இந்த நிலையை திடீரென்று அவர்கள் ஒரு நாள் உணர்கிறுர்கள்.

"ஐயோ, நம் உடல் அழகு எங்கே போய்விட்டது? நம் உடல் வலிமை எப்படி மறைந்து விட்டது. அந்த சிறு பையன் வலிமைகூட நமக்கு இல்லாமல் போய் விட்டதின் காரணமென்ன? பெண்களிடம் இப்போது நாம்.........? ஐயையோ, அந்த நாட்கள் மீண்டும் எப்போது வரும்; நாம் இருந்தும் பயன் என்ன?" என்று அவர்கள் சிந்திக்கிறுர்கள். ஆனல் நம்பிக்கையின் பொறி அவர்களுக்கு அப்போது ஏற்படுகிறது. அதிலிருந்து அவர்கள் பழைய நிலைமையை ஆத்ம சக்தியால் பெற முயற்சிக்கின்றனர். பெரிதும் பாடுபடுகின்றனர். ஆத்ம சக்தியோ வலிமை யிழந்து விட்டிருப்பதால், பழைய நிலையில் கொஞ்சம்கூட எட்டிப்பார்க்க முடியாமற் போய் விடுகின்றது. ஆத்ம சக்தி குட்டிச் சுவராய் விடுகிறது. அப்போதுதான் அவர்கள் பைத்தியக்காரர்க ளாகவாவது மாறி விடுகின்றனர்; அல்லது தற்கொலையிலாவது அமைதிதேடிக் கொள்கின்றனர்.

ஆனல், நம்பிக்கை மட்டும் இருந்தால் அவர்களும் எமன் வாயிலிருந்து மீண்டிருக்கலாம். முதலில், சிற்றின்ப உணர்ச்சிகளையும், லாஹிரிகளையும் நிறுத்தி விட்டு ஆத்ம சக்திக்கு வலிமை ஏற்றவேண்டும். நம்பிக்கையினுலேயே இப்படிச் செய்ய முடியும். நாளடவில் நம்பிக்கை யூட்ட யூட்ட உயிரிழந்த ஆத்மசக்திக்கு உயிருண்டாகும்.

பின்னரே ஔஷதம், தேகப்பயிற்சிகள், ஆகாராதிகள் இவைகளால் அதற்கு சக்திகொடுக்க வேண்டும். முடிவில் ஆத்ம சக்தி மறுபடியும் தலை சிறந்து விளங்கும். அழகின் மறுமலர்ச்சியை அங்கங்களில் காணலாம். ஜீவ ரத்தம் நரம்புகளில் 'குபுகுபு' வென்று பாய்ந்துவிடும்.

அவன் மீண்டும் மனிதனுகி விடுவான். ஆகவே ஆத்ம சக்திக்கும் தேகாரோக்கியத்துக்கும் எப்போதும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இரண்டையும் நல்ல நிலைமையில் வைத்திருந்தால் ஒழிய மனிதன் மனிதனுயிருக்க முடியாது.

Edited and Published by **N. VIJAYAKUMAR**, 329, T. H. Road, Washermenpet, Madras.
Printed at the SRI AUDIMULAM PRESS, 20, Perumal Kovil Garden Street, G. T. Madras.

தமிழ் இலக்கிய வாரப் பத்திரிகை "கலா நிலயத்தின்"

உதவிக்காக

ஷெரிடின் எழுதிய

பிஸாரோ நாடகம்

தமிழில்

1936ஸ் ஆகஸ்ட்டுமீ 16உ ஞாயிறு மாலை 6-மணிக்கு

ஒற்றைவாடைக் கொட்டகையில்

நடத்தப்படும்

ஸ்ரீமான்கள்

K. S. அனந்தநாராயண ஐயர்

T. N. சேஷாசலம் ஐயர்

ஸ்ரீமதி T. S. ஜானகி முதலியோர்

முக்கியமான பாகங்களை ஏற்று நடிப்பார்கள்.

கட்டணம். ரூ. 5, 3, 2, 1, அணா 8.

எல்லா வகுப்புக்களிலும் மாதர்களுக்குத் தனியிடம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

Regd. No. M. 3560

புகழ் மாலைகள் சூட்டிக் கொள்ளத் தயாராகின்றன

கௌசல்யா பரிணயம்

சிறந்த புராண சம்மந்தமான
சரிதை.

பாலயோகினி

மனோரம்மியம் மிகுந்த சமூக
சம்மந்தமான
கதை.

ஜய தேவர்

அஷ்டபதி என்னும் அரிய
நூலை அருளிச் செய்த
மகா பக்தரின் சரிதை.

மற்ற விபரங்களை விரைவில் எதிர்பாருங்கள்.

பட உற்பத்தியில் நாம் முன்னணியில் நிற்கிறோம்.

மற்றவர்கள் எம்மைப் பின் பற்றுபவர்கள்தான்.

படம் வேண்டுவோர் எழுதுக:-

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன்
7, பெல்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

டெலிபோன் : 8487. தந்தி : "NAVEENA"

Wrapper Pages Printed at The Modern Printers, 98, China Bazaar, Madras.